"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

சித்திரை - வைகாசி - ஆனி - 2008



"பெருமானைப் பெற்றாம் அன்றே"

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்



# வையகம் பயனுற வாழ்ந்தவர்

மூன்று வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம் அது. ஆவணி மாதம். தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்துக்குச் சென்றிருந்தேன். அங்கு போகும்போதெல்லாம் இயன்ற நன்கொடை வழங்குவது என் வழக்கம். அன்றும் அவ்வாறே கோயில் வாசலிலுள்ள அலுவலகத்துக்குச் சென்றேன். அங்கு கடமையில் இருந்த அன்பர் திரு சிவபாலன் அவர்கள் என்னை அன்னதான மண்டபத்துக்குப் போய் அம்மாவைப் பார்த்து வாருங்கள் என்றார். அங்கே பலநூறு அன்பர்கள் உணவு அருந்தவென வரிசையாக நிற்கிறார்கள். கொழுத்தும் வெய்யில். அம்மா அவர்கள் ஒரு நாற்காலியில் இருந்தபடி நடப்பவைகளைக் கவனித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

வரிசையில் ஓர் இளம்பெண் கையிலே சிறு குழந்தையுடன் நிற்கிறார். அவரை யாரும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. அவரவர் பாட்டில் முண்டியடித்துக்கொண்டு நிற்கிறார்கள். இதைக் கவனித்த அம்மா, "குழந்தையோடு ஒருவர் கஷ்டப்படுவது கண்ணுக்குத் தெரியவில்லையா?" என்று கேட்டபடி அந்தப் பெண்ணை முன்னுக்கு அழைத்து உணவளிக்கத் தொண்டர்களுக்கு ஆணையிடுகிறார். அன்பும் பண்பும் பாசமும் கலந்த அவரின் செயலைக் கண்டபோது என் நினைவுக்கு வந்த திருக்குறள்,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்" என்பது

இந்தத் திருக்குறளை இறைவனும் படித்திருக்கவேண்டும். அதனாலேதான் தெல்லிப்பளையிலே பலரும் பயனுறும் வகை அங்கு சேவைசெய்ய "அம்மா"வை இறைவன் பணித்தாரோ என்று எண்ணினேன். அந்த இறைவனுக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்கள்.

சிறுவர்களுக்குக் கல்வி, பெண்களுக்கு ஆதரவு, இளம் வயதினருக்கு நல்வழி காட்டல் என்று அம்மையார் செய்த சேவைகள் அளப்பல. அவரின் நேர்மை, நாணயம் போன்ற பண்புகளைக் கண்டு அவரின் தொண்டுக்கு தாமாகவே வந்து தனம் கொடுத்தவர்கள் பல்லாயிரம்.

ஆசிரியராக, சொற்பொழிவாளராக ஆரம்பித்து, காலகதியிலே தொண்டராக, பலருக்கும் நிழல் கொடுக்கும் கல்லால விருட்சமாக அவர் பரிணமித்தார். ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தின் அறங்காவலராக ஆனதிலிருந்து அவருடைய தொண்டு நிறைந்த துறவு வாழ்க்கை அலைகடல் கடந்து அவருக்கு மதிப்பையும் புகழையும் தேடித்தந்தது.

கதியற்ற பிள்ளைகளுக்கும் பதியற்ற பெண்களுக்கும் நிதியற்ற ஏழைகளுக்கும் தாயாக, தந்தையாக, குருவாக விளங்கிய அன்னை இன்று தெய்வமாகிவிட்டார். அவர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!

- க. ஜெகதீசுவரன்

மணி 16

# கலசம்
# KALASAM

ஒலி 58

E-mail: kalasam @ gmail.com

## திருவருள்

சைவ முன்னேற்றச் சங்கத்தின் சரித்திரத்தில் 2008 ஒரு முக்கிய வருடமாக அமைகின்றது. சைவ சித்தாந்த வழிநின்று சங்கம் இறைவழிபாட்டையும் சமூகத் தொண்டையும் இரு கண்களெனப் பேணிவருகிறது. இங்கிலாந்தில் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக சேவை புரிந்து வரும் சங்கம் இந்த ஆண்டிலே இன்னுமொரு முக்கிய அடியை எடுத்து வைக்கிறது. சைவர்களுக்கெல்லாம் கோயிலாக விளங்கும் சிதம்பரம் கோயிலில் அருள்பாலித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீசிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீநடராசப் பெருமானின் திருவுருவை இங்கிலாந்து மக்கள் வழிபட வசதியாக தம் வழிபாட்டு மண்டபத்தில் சங்கம் பிரதிட்டை செய்துள்ளது. வலம்புரி விநாயகர், சமயகுரவர் நால்வர் திருவுருவங்களும் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளன.

பெரியோர்களின் ஆசியும், சங்கத்தின் மூத்த உறுப்பினர்களின் நன்கொடையும் ஏனையோரின் ஒத்துழைப்பும் இந்தத் திருப்பணிக்கு உறுதுணையாய் அமைந்துள்ளன. தற்காலம் பயண வசதிகள் பெருகி உலகம் சிறுத்துவிட்டது. இருந்தாலும் எல்லோரும் எப்பொழுதும் சிதம்பரம் போவது நடைமுறையில் இயலாத காரியம். அதை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த வழிபாட்டு இடம் சிதம்பரத்தில் உள்ள கனகசபை போலவே அமைப்புக் கொண்டுள்ளது. ஸ்ரீநடராஜர், ஸ்ரீசிவகாமசுந்தரி, ஸ்ரீவிநாயகர் திருவுருவங்களோடு நால்வர் சிலைகளும் நந்தி – பலிபீடமும் அமையப்பெற்று கனகசபை போலவே இந்த மண்டபம் காட்சியளிக்கிறது. அதனால் இங்கிருந்தே அந்தக் கோயிலைத் தரிசிக்கும் மனக் காட்சியை நமக்கு இது தரும்.

லண்டனிலே கோயில்கள் பல இன்று இருக்கின்றன. ஆனால் இவை எவையும் தோன்றுமுன்னரே சைவ முன்னேற்றச் சங்கம் இல்லந்தோறும் கூட்டு வழிபாடுகளை நிகழ்த்தி வந்தது. நால்வர் குருபூசைகள், புதுவருடம், தைப்பொங்கல் நிகழ்ச்சிகள், கந்தசஷ்டி, எனப் பல சைவத்திருநாள்களைச் சங்கம் கொண்டாடி வந்தது. தனக்கென ஒரு மண்டபம் வாங்கியபின் இந்த வழிபாடுகளை அங்கே சங்கம் நடத்தி வருகிறது. சைவநெறியில் நால்வர் பாடசாலையையும் நடத்தி வருகிறது. இது தவிர, முதியோர் வாரந்தோறும் சந்தித்தல், சிறுவர்கள் நுண்கலைகளைப் பயில வருதல் என்று பலரும் சங்க மண்டபத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள். இவர்களெல்லாம் அங்கு வரும்போது வழிபட வசதியாகச் சைவமக்களின் முழுமுதற் கடவுளான சிவனின் உருவத் திருமேனியை தன்னகத்தில் சங்கம் வழிபாட்டுக்கென பிரதிட்டை செய்ய நினைத்தது சாலப்பொருத்தமே. சங்கத்தின் இந்த நற்பணியால் நடராஜரைத் தரிசிக்க விரும்பும் அன்பர்கள் சங்க மண்டபத்திலே வழிபாட்டு நேரங்களில் தரிசிக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

இறைவன் சைவமுன்னேற்றச் சங்க உறுப்பினரின் மனதிலே வந்து, அவர்களின் மண்டபத்திலே இருக்க இடங்கேட்டு, தானாகவே எழுந்தருளியது அவன் திருவருளே!

- ஆசிரியர்

### நிர்வாகக் குழு


திரு. க. ஜெகதீசுவரன் திரு. ச. ஆனந்ததியாகார் திரு.சி.அற்புதானந்தன் திரு.சி.தம்பு
திரு.சு.வைத்தியநாதன் திரு.வ.இ.இராமநாதன்

தொடர்பு முகவரி: SMS 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732
smsuk77@yahoo.co.uk

# இந்த இதழில்


| | |
|---|---|
| பெருமானைப் பெற்றாம் அன்றே | 03 |
| செவிவழிச் செய்திகள் ..... | 04 |
| விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் | 06 |
| Sri Ananda Nadarajar Thotram In Saiva Munnetta Sangam (UK) | 07 |
| இனிதே பிறவி | 11 |
| சம்ஸ்கிருத மொழியின் சிறப்பும் தத்துவமும் | 13 |
| தென்னாட்டுத் திருமுறைத் தலங்கள் | 16 |
| கோயிலும் கலைகளும் | 19 |
| சங்க நிகழ்வுகள் - படங்கள் | 22 |
| குலச்சிறை நாயனார் குறும்பநாயனார். | 29 |
| மூவர் வேண்டிப் பெற்ற வரங்கள். | 31 |
| சபரிமலை ஐயப்பன் | 34 |
| ஆசிச்செய்தி | 36 |
| எழுத்துப் பிழை அற.... | 37 |
| தமிழ் மூவர்கள் | 38 |
| சிறுவர் கலசம் | 39 |

# 'பெருமானைப் பெற்றாம் அன்றே'



தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன். அவன் இருக்கும் கோயில் சிதம்பரம். திருவாசகத்தின் பொருள் என்ன என்று கேட்டபோது மாணிக்கவாசகர் "கைகாட்டித் தம்முருவம் காட்டாது" மறைந்த இடம் இது. தேவார மூவரும் வேறு பல ஞானிகள் யோகிகளும் தரிசித்த தலம். சமயகுரவர் நால்வரோடு நக்கீரர், பட்டினத்தார், அருணகிரியார் முதல் முத்துத்தாண்டவர் வரை பலரும் இந்த இறையை வணங்கிப் பாடியுள்ளனர். அத்துணைச் சிறப்பு வாய்ந்த இத்தலத்திலுள்ள ஸ்ரீ சிவாகாமி அம்மை உடனுறை ஆடவல்லானின் திருவுரு போன்றதோர் உருவைச் சமைத்து சைவமுன்னேற்றச் சங்கம் லண்டனிலுள்ள தமது வழிபாட்டு இடத்தில் நிறுவியுள்ளது. அச்சங்கத்தின் நெடுங்கால உறுப்பினர்களான ஐவரது பங்களிப்பில் இத்திருப்பணி நடந்துள்ளது.

"தெய்வம் என்றால் அது தெய்வம், சிலையென்றால் வெறும் சிலைதான்" என்றொரு பாடல் பழைய திரைப்படத்தில் வந்தது. கேம்பிறிட்ஜ் சந்தையில் ஒரு கடையில் வெறும் சிலையாக இருந்த நடராஜர் வடிவம் திரு பத்மநாதன் குடும்பத்தினரின் சிந்தையில் தெய்வமாக வந்து அமர்ந்தமை இந்தப் பணிக்கு ஆணிவேராக அமைந்த அதிசயம். இறைவன் தான் எங்கு இருக்க விரும்புகிறானோ அங்கு வர தன் அடியவர்களையே கருவிகளாக ஆக்குகிறான் என்பது புராணங்களிலே நாம் காணும் கதைகள். இன்று அதை நிதரிசனமாக இங்கே காண்கிறோம். முன்னவனே முன்னின்றால் முடியாததும் உண்டோ!

உய்த்தாடித் திரியாதே உள்ளமே ஒழிகண்டாய் ஊன்கண் ஓட்டம்
எத்தாலும் குறைவில்லை என்பர்காண் நெஞ்சமே நம்மை நாளும்
பைத்தாடும் அரவினன் படர்சடையன் பரஞ்சோதி பாவம் தீர்க்கும்
பித்தாடி **புலியூர்ச் சிற்றம் பலத்தெம் பெருமானைப் பெற்றாம் அன்றே**

# செவிவழிச் செய்திகள் .....

கூத்தப்பெருமான் திருவுருவத் தோற்றத்தைப்பற்றிச் சுவையான ஒரு செய்தி தமிழ்நாட்டில் வழங்குகின்றது. சோழமன்னர்கள் கூத்தப்பெருமானிடம் எல்லை கடந்த அன்புடையவர்கள் என்பது உலகறிந்த செய்தி. சிவபாதசேகரன் என்று பட்டம் தாங்கும் அளவிற்கு அவர்கள் அன்பு பெருகியிருந்தது. அச் சோழர்களில் ஒருவன் நடராச உருவத்தை வார்க்க எண்ணினான். நாட்டில் உள்ள கைதேர்ந்த ஒழுக்கம்மிக்க- மந்திரசித்தியுள்ள சிற்பிகளாகப் பலரை வரவழைத்தான். நல்ல நாளிலே கருச் செய்யத் தொடங்கப்பெற்றது. செம்பு முதலிய ஐந்து உலோகக்கூட்டுச் சரக்குகள் கொதிக்கவைக்கப்பெற்றன. உருகிக் குழம்பான போது கருவை நிமிர்த்திச் சிற்பிகள் ஊற்றினர். நடராச உருவத்தில் சரக்கு ஓடிப்பாய்வதும் உருவு அமைவதும் மிக்க கடினம். மண்கட்டிய கரு ஆறியதும் உடைத்துப் பார்த்தனர். உரு அமையவேயில்லை. இவ்வண்ணம் பல ஆண்டுகளாயின. அரசன் மனம் உடைந்து சிற்பிகளை அழைத்து “எப்படியாவது இன்று கரு உருவாகவேண்டும், எனக்கொன்றும் தெரியாது, நீங்கள் எப்படிச் செய்வீரகளோ? இன்று மாலைக்குள் திருவுருவம் அமையவில்லையானால் உங்கள் சிரம் கொய்யப்படும். இதுமட்டும் உறுதி” என்று உத்தரவிட்டுக் கோபத்தோடு சென்றுவிட்டான்.

சிற்பிகள் சிந்தனை உருக்கிய செம்பைவிடக் கொதித்தது. நேரம் ஆகிக்கொண்டே இருக்கிறது. மாலை மூன்றுமணியும் ஆயிற்று உருச் சமைந்தவகையைக் காணோம். இன்றோடு நாம் தொலைந்தோம் என்று அவர்கள் அயர்ந்து உட்கார்ந்துவிட்டனர். அங்கே கிழவேதியர் ஒருவரும் கிழவி ஒருத்தியும் வந்தனர். “அப்பா எமக்குப் பெரும் பசியாக இருக்கிறது. கஞ்சி காய்ச்சுகிறீர்கள் போலிருக்கிறது. அதில் கொஞ்சம் ஊற்றுங்கள். உங்களுக்குப் பெரும் புண்ணியம் உண்டாகும்” என்று கூறினர். சிற்பிகளுக்கு ஆத்திரம், “ஆமாம்! கஞ்சி காய்கிறது. போ ஐயா! போ! இன்று மாலை இன்னும் மூன்று மணி நேரந்தான் இருக்கிறது. அதற்குமேல் எங்கள் ஆயுள் முடியப்போகிறது. நாங்கள் உயிருக்கு மன்றாடும்போது புண்ணியமாம் கஞ்சியூற்றலாம்! போ ஐயா! போ!” என்று கத்தினார்கள். வந்த கிழவேதியர் கொதிக்கிற செம்பிலாவது நாலு அகப்பை ஊற்றப்பா நாங்கள் குடித்துப் பசியாறுகிறோம் என்று வற்புறுத்தினார். சிற்பிகள் வியந்து, இந்தா! பிடி! என்று ஊற்றினார்கள். செம்பு முழுதையும் கிழவேதியரும் கிழவியும் வாங்கிக் குடித்தனர். அப்படியே ஆனந்த நடராசமூர்த்தியும் சிவகாமித்தாயுமாகக் காட்சியளித்தனர். சிற்பிகள் வியந்து இறைவனைப் போற்றினர். செய்தியைச் சோழமன்னருக்குத் தெரிவித்தனர். சோழ மன்னன் தம்மிடம் ஆனந்தக்கூத்தப் பெருமானுக்கிருந்த அளவற்ற கருணையைப் பாராட்டினான். அவ்வுருவத்தை எடுப்பித்துக் கொண்டு போய்த் திருக்கோயில் அமைத்துப் பிரதிட்டை முதலியன செய்வித்தான். அதுவே இன்று தில்லையம்பலத்துள்ள திருவுருவம்.

இதனால் அறியப்பெறும் உண்மை, சிற்பி சித்த சுத்தியோடு செய்யத் திருவுரு அவனருளால் அமையவேண்டுமே அன்றிப் பசு போதத்தால் -செயலால் அமைக்க ஒண்ணாத அருமையுடையது என்பது.

கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பு முகமதியர்களால் சில தொல்லைகள் தென்னாட்டில் விளைந்ததுண்டு. அப்போது “நவாப் கலகம்” என்று வரலாற்றில் பேர்பெற்ற கலகம் நடந்தகாலம். எல்லா உருவங்களையும் அவர்கள் உடைத்து வந்தநேரம். முகலாயர்கள் சிதம்பரத்தின்மீதும் படையெடுத்துவந்தனர். இவர்கள் வருவதை உணர்ந்த தில்லை வாழந்தணர்களும், ஆயிரத்தெட்டு மடாதிபதிகளும், அகப்பரிவாரங்களும், மெய்காவற்சைவர்களுமாக

ஒருங்குகூடி, நடராசவடிவை அப்புறப்படுத்திவிடுவது என்று முடிவுகட்டினார்கள். இவர்களும் கலகக்காரர்களைப்போல ஆயுதந்தாங்கி, கூத்தனுருவத்தைத் துணியில் சுற்றி மறைத்துத் தூக்கிக்கொண்டு தென்திசை நோக்கி ஓடினார்கள். இதனை உணர்ந்த முகலாயர்கள் சென்றவிடமெல்லாம் துரத்தினர். கடைசியாக மலையாளக்கரை ஓரமாகச் சென்று மலைக்குகைகளில் ஒளித்துவைப்பது என்று முடிவு கட்டினர். அங்கும் அவர்கள் செல்லவே. சில மெய்காவற்சைவர்கள் துலுக்கவேடந்தாங்கி இவ்வுருவத்தை எடுத்துச் சென்று ஓர் ஆலமரப்பொந்தில் மறைத்துவைத்துத் திரும்பினர். இச்செய்தி அவர்களுக்கு எட்டிவிடப்போகிறதே என்ற கவலையால், தாம் மேற்கொண்ட மாறு வேடத்தோடேயே கலகக்காரர்களோடு கலந்து உளவறிந்து வந்தனர்.

இவர்கள் உளவாளிகள் என்பது எப்படியோ கலகக்காரர்களுக்கு எட்டிவிட்டது. உடனே அவர்களைக் கொன்றுவிட்டனர். இதற்குள் கலகம் முடிந்துவிட்டது. கூத்தப்பெருமான் ஆலமரப்பொந்தையே சிற்றம்பலமாகக்கொண்டு சிலகாலம் விளங்கினார். அதனால் அந்த இடம் ஆலப்புழை எனப்படும். அமைதி நிலவியதும் அவ்வூரவர்கள் ஒற்றுமையுடன் மெய்காவற்சைவர்களைக்கொண்டு ஊரம்பலத்தில் கூத்தப்பெருமானை எழுந்தருளுவித்து வழிபட்டுவந்தனர். அவ்வூரே இப்போது அம்பலப்புழை என வழங்குவதாயிற்று என்றும் ஒரு செய்தியுண்டு.

இத்தகைய வரலாறுகள் நடராசப்பெருமான் எழுந்தருளியுள்ள தலங்கள் அனைத்திலும் வழங்கிவரும் பொதுவான ஒரு செய்தி. சிற்பத்திறம் செறிந்த பிற உருவங்களைப்பற்றியும் இத்தகைய வரலாறு சிறிது மாற்றத்துடன் வழங்குகிறது.

தகவல்: லண்டன் சபரி
(ஆடவல்லான் வெளியீடு எண் 224 திருவாவடுதுறை ஆதீனம் 1967)

---

# என்ன பெயர் வைக்கலாம்?

குழந்தை பிறந்தால் என்ன பெயர் வைப்பது என்பது பல பெற்றோருக்கும் ஏற்படும் பெரிய குழப்பம். குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் மக்கள் வெளிநாட்டார் சொல்லக்கூடிய விதத்திலே சிறு பெயர்களை வைக்க ஆசைப்படுகிறார்கள். அத்துடன் எண்சோதிடமும் புகுந்துவிடுகிறது. இதனால் பொருளற்ற, வாயில் நுழையாத, வேற்று மொழிப் பெயர்களைத் தம் பிள்ளைகளுக்குச் சூட்டுகிறார்கள். நாம் அப்பெயரைத் தவறாகச் சொல்லிவிட்டால் நம்மீது கோபப்படுகிறார்கள்.

இறைவனை அடைவதற்கான வழிகள் பல. அவற்றுள் குறிப்பிடத்தக்க வழி - இறைவன் நாமத்தை செபித்தல் என்று சாத்திரங்கள் சொல்லுகின்றன. இப்படி இறைநாமத்தை செபித்து வாழ்வை வென்ற மகான்கள் பலர். இதனாலேயே பழைய காலத்து மக்கள் தம் பிள்ளைகளுக்கு நடராசா, பசுபதி, முருகானந்தன், இலக்குமி, சரசுவதி, மீனாட்சி என்று பெயரை வைத்தார்கள். பிள்ளைகளை அழைக்கும்போது பெயர் சொல்லி அழைக்கவேண்டும். அப்படி ஒவ்வொரு முறையும் பெயரைச் சொல்லும்போது தம்மை அறியாமலே இறை நாமத்தை சொல்ல வழி ஏற்படுகிறது.

கவலை, துன்பம் வரும்போது - பிள்ளைகளை அழைக்கிறோம். இறை நாமம் நம்மை அறியாமலே வாயில் வருவதால் பிள்ளைகள் வராவிட்டாலும் இறைவன் நிச்சயமாக நம்மை வந்து காப்பான். நல்ல பெயரை நம் பிள்ளைகளுக்கு வைக்கலாமே!

# விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

**இந்தக்கால ஆகாயவிமானம், ராக்கெட் போன்ற விஞ்ஞானத் தொழில் நுட்பங்கள் அந்தக் காலத்திலேயே நமது புராணங்களிற் சொல்லப்பட்டிருந்தாலும் விஞ்ஞான வளர்ச்சியில் நமது நாடு பின்தங்கியிருப்பதற்கு என்ன காரணம்?**

நமக்கு வேண்டிய சௌகரியங்களைச் சுலபமா ஏற்படுத்திக்கொள்வதற்கு என்னென்ன விடயங்களை எல்லாம் கண்டுபிடிக்கிறார்களோ அதைத்தான் விஞ்ஞானமென்று நீங்கள் குறிப்பிடுவதாக உங்கள் கேள்வியிலிருந்து எனக்குப் புலப்படுகிறது. அதாவது, ஐம்புலன்களால் நாம் அநுபவிக்க வேண்டியதைச் சிரமமில்லாமல் அநுபவிக்க உதவும் உபகரணங்களைக் கண்டுபிடிப்பதை விஞ்ஞான முன்னேற்றம் என்கிறீர்கள். ஆனால் விஞ்ஞானத்தின் அர்த்தமே வேறு.

நீங்கள் குறிப்பிடும் விஞ்ஞானத்தால் ஏற்கெனவே இருப்பதைத்தான் கண்டுபிடிக்க முடியும். நம்மைச் சோம்பேறியாக வைப்பதற்கு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் உதவவில்லையே என்று கவலைப் படுகிறீர்கள். எல்லாரையும் சுறுசுறுப்பாக்க அல்லவோ விஞ்ஞானம் உதவவேண்டும். சாப்பிட அவசரம், ஆபீசுக்கு அவசரம், கல்யாணத்துக்கு அவசரம், பிள்ளைபெற்றுக்கொள்ள அவசரம், சாவதற்கு அவசரம். இப்படி எல்லாவற்றையும் அவசர அவசரமாகச் செய்வதற்குத்தான் விஞ்ஞானம் உதவுகிறதே தவிர எல்லாவற்றையும் சரியாகச் செய்து சந்தோஷமாக வாழ உங்கள் விஞ்ஞானம் உதவவில்லையே. ஆகாயவிமானம் கண்டுபிடித்தீர்கள். எத்தனை இடத்தில் அது விழுந்து எத்தனைபேர் பரிதாபமாக இறந்துபோயிருக்கிறார்கள்? ஆபத்து இல்லாத விமானத்தைக் கண்டுபிடிக்க முடிந்ததா உங்களால்? நீங்கள் குறிப்பிடும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் இலாபத்தை விட இழப்புகள்தான் அதிகம். இயற்கை அல்லாதது எல்லாம் அழிவுக்குத்தான் இட்டுச் செல்லும். அழிவு இல்லாத ஒன்றை உங்களாற் கண்டுபிடிக்க முடியாது.

நடந்து போகிறவனுக்கும் மாட்டு வண்டியிற் போகிறவனுக்கும் குதிரை வண்டியிற் போகிறவனுக்கும் விபத்து ஏற்படுவதில்லை. பழைய காலத்தில் ஆறஅமர நாம் உபயோகித்துக்கொண்டிருந்த பொருள்களால் நமக்கு ஆபத்து வருவதில்லை. புலன்களுக்கு சௌகரியத்தைக் கொடுக்கும் கண்டுபிடிப்புக்களை விஞ்ஞானம் என்று எண்ணாதீர்கள். சாட்சாத் பரப்பிம்மத்தை தெரிந்துகொள்வதுதான் விஞ்ஞானம். எனக்கு அரைக்கத் தெரியாதென்றால் மாவாகக் கொடுப்பீர்கள். ஊற்றத் தெரியாதென்றால் தோசையாகக் கொடுப்பீர்கள். சாப்பிடத் தெரியாதென்றால் "க்ளுக்கோஸ்" ஏற்றுவீர்கள். வியாதி வராமல் செய்யமுடியுமா உங்கள் விஞ்ஞானத்தால்? இறப்பில்லாமற் செய்ய முடியுமா? இயற்கையை மீறமுடியுமா? இயற்கைக்குக் கட்டுப்பட்டதல்லவா உங்கள் விஞ்ஞானம்? ஆன்ம திருப்தியைக் கொடுக்க நீங்கள் குறிப்பிடும் விஞ்ஞானத்தால் முடியாது.

இராமர் புட்பக விமானத்தில் போனார். எந்த இடத்துக்கு விமானத்தில் மட்டுமே போக முடியுமோ அங்கே விமானத்தில் போனார். நடந்தே போகக்கூடிய இடத்துக்குக்கூட "ஆட்டோவில்" போவதைப் போல அல்ல அது. எனவே நமக்கு அழிவைத் தரக்கூடிய விஞ்ஞானத்தின் பக்கம் நம் ரிஷிகளின் சிந்தனை செல்லவில்லை. நம் முன்னோர்கள் விஞ்ஞானம் தெரியாதவர்கள் அல்லர். "நீண்ட ஆயுளோடு இருக்கவேண்டுமா? பிராணாயாமம் செய், தியானம் செய். ஆயுள் நீளும்" என்றார்கள். உங்கள் விஞ்ஞானத்தால் ஆயுள் நீளுமா? ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதுபோல இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கைக்கு உதவாத விஞ்ஞானத்துக்கு அவர்கள் முக்கித்துவம் கொடுக்கவில்லை. அவ்வளவுதான்.

சேஷாத்திரி நாத சாஸ்திரிகள் - நன்றி "சக்தி"

AUM
Namasivaya

# Sri Ananda Nadarajar Thotram In Saiva Munnetta Sangam (UK)

## "Bringing Kanaka Sabha to United Kingdom"

I am a born and practicing Saivite and I believe that all Saivaites have an inbuilt desire to establish the Saiva worship of Lord Nadarajar and his consort Sri Sivagami Ammaiyar in their Heart, Home and Temple.

Saiva Munnetta Sangam [UK] has been and still is in existence as a leading Charity in the United Kingdom, performing "Community Service through Hindu Concern". The main focus of the Saiva Munnetta Sangam [UK] is to preserve and propagate the Hindu thought of world's culture through its activities and services to fellow human kind. All its activities are built around the central principle of Vedic Scriptures of honoured and believed traditions.

In following its core principle of preservation and propagation of Saivaism through its community enterprises, the burning desire for a place of worship was gradually evolving in the hearts and minds of the members of Saiva Munnetta Sangam. This burning desire has now been materialized and brought to reality in front of our eyes by Lord Nadarajar himself when he has chosen the premises of Saiva Munnetta Sangam as his place of abode with his consort Sri Sivagami Ammaiyar.

### HISTORICAL PERSPECTIVE

It was a hot summer day in 1988. My wife and I with our two children Vijayalakshmi and Senthooran were in Cambridge and we took a walk in the Cambridge Market. There we saw a Nadarajar Statue in Gold colour on the pavement being placed for sale by a market trader. The Statue was shining in the afternoon sun and my wife Vahsuki became very upset that this Nadarajar Statue was being traded on the pavement of a busy road. The trader was an English gentleman and I asked him whether he was aware of the significance of the Statue. His answer was a definite "no" and he said as far as he was concerned this Statue is an art object. He said he was happy to get rid of this Statue for a British Pound [£1]. We were so thrilled that we paid the money and were so excited to own a Nadarajar Statue.

I brought this Statue home and cleaned it with traditional tamarind paste and salt, which brought about its brilliance and shine of the metal. We decided to keep this Statue in our living room at a prominent place as an object of Indian Art.

Since 1970, we were gifted with the ownership of a Spadiga Lingam [made in glass] given to us by a Priest in Rameshwaram Ramanathasamy Temple in South India. This Spadiga Lingam occupied a prominent place in the altar of our dedicated shrine room. We named this Spadiga Lingam Ramanatha Swamy and did pooja every Friday with Abishegam and Nevethanam [submission of prasadam]. We were absolutely mystical about the connection between the presence of the Spadiga Lingam and the sudden acquiring of the Nadarajar Statue in our home.

Within a few days of this mystical appearance of Lord Nadarajar in our home, we were visited by two Sivachariyars. We had the good fortune of a visit by Rajathi Raja, Shiva Sri Naguleswara Sivachariyar and the late Shiva Sri Dr T S Sambamurthi Sivachariyar. They both suggested that the Spadiga Lingam requires daily Abishegam and Pooja and Lord Nadarajar must be with his consort Sri Sivagami Ammaiyar. The late Shiva Sri Dr T S Sambamurthi Sivachariyar said he will send me a Sri Sivagami Ammaiyar statue of fitting description sooner from South India. Hence the arrival of the Consort for Sri Nadarajar within a month, which pleased me immensely. However, the reality of us not being able to conduct daily Abishegam and Poojas for the Spadiga Lingam in our home was a serious worry in the minds of Vahsuki and me.

We consulted our children Vijayalakshmi and Senthooran and with their consent donated the Spadiga Lingam and the statues of Sri Nadarajar and Sivagami Ammaiyar to Saiva Munnetta Sangam. Sri Vathiyanathan Kurukkal of Saiva Munnetta Sangam accepted the Spadiga Lingam and both Statues, performed the required rituals and sanctified them ready for daily Poojas.

We were so pleased to see the Spadiga Lingam and the Statues sharing the altar in Saiva Munnetta Sangam with Nayanmar Nalvar.

When all this was happening Saiva Munnetta Sangam was making new developments in their premises. A new prayer mandapam with a proper Sannithi was built incorporating Indian architecture and vibrant colours with aesthetic appeal. In early 2007, The Nayanmar Nalvar, Sri Vinayagar and Sri Sivagami Ammai SamethaNadarajar, statues were formally consecrated in the new Sannithi in the Prayer Mandapam in the upper Hall of Saiva Munnetta Sangam.

The religious ceremony was followed by blessing by Kailai Shiva Sri Rama Naganatha Sivam Kurukkal. In his discourse, most revered Kurukkal suggested that it would be fitting

if we consecrated a Nadarajar Moorthy of larger size in proportion to the Nayanmar Nalvar Vigrahams [statues]. I raised my hand without any consideration and agreed that I would complete this Thiruppani. My dearest ally Dr V Balasegaram who was present in the congregation, raised his hand and said he would be happy to take over the Thiruppani of contributing towards the construction of Sri Sivagami Ammaiyar.

Everyone in congregation felt a divine presence and I truly believed that the proposal from Kailai Shiva Sri Rama Naganatha Sivam Kurukkal was an ASAREERI or Theiva Sangalpam [ a divine order]. At the aftermath of this ceremony Sri Vaithiyanatha Kurukkal of Saiva Munnetta Sangam proposed that it would be fitting and complete if we constructed a Vinayagar Vigraham to match the proportions of Sri Nadarajar and Sri Sivagami Ammaiyar.

In February 2007, I, on behalf of Saiva Munnetta Sangam and Dr V Balasegaram, placed an order for the construction of three Vigrahams with Sri S Devasenapathy Sthapathy and Sons of Swami Malai, Thanjavur in South India. When we decided to place the order for the construction of the Vigrahams, in consultation with Saiva Munnetta Sangam, I decided to consult with the Deekshithars of Chidambaram-the Home of Nadarajar, Koyil par excellence [the temple of temples]. We were given authoritative advice on the construction of the three Moorthys' in Pancha Logam about the size and design of the Vigrahams.

We were fortunate and blessed by Lord Nadarajar himself in giving us the personal services of Shiva Sri T N Rathnathandava Deekshithar of Sri Sabanaygar Koyil Trustee and Pooja of Chidambaram. The Deekshithar himself personally made several journeys from Chidambaram to Swami Malai in Thanjavur to supervise the setting of mould and the gradual construction process of the three Icons. He bought Gold on behalf of us and was present in the Gold melting ceremony which was added to the three Icons. Hence the three Icons are of great shine and brilliance.

The Deekshithar personally supervised the packaging and shipment of the three Moorthys by sea. The three Moorthys' Vigrahams arrived safely in the United Kingdom by January 2008. We are most grateful for the personal contribution by Shiva Sri T N Rathnathandava Deekshithar.

## PRESENT PERSPECTIVE

The arrival of Sri Valampuri Vinayagar, Sri Sivagami Ammai Sametha Nadarajar prompted the discussion of their permanent abode with Nayanmar Nalvar, within the Saiva Munnetta Sangam Premises.

The present Sannithi was not big enough to house all the Moorthys and the advice received from Chidambaram suggested that the present Sannithi was not facing south

[Thetku Thissai] which is the direction Nadarajar must face. Hence the idea of building a Sannithi to house the three Moorthys and Nayanmar Nalvar was born. All great souls of the Saiva Munnetta Sangam agreed that we would replicate the Thillai Nadarajar Sannithi in Chidambaram according to scale with Gold plated roof. The new Sannithi is being built following strict guidelines in the vedic scripture known as Vastu-Sastra. The Sannithi will be fully covered with real Granite finish and Golden Vimanam [roof] and completed with nine [9] golden Kalasams. The Sannithi will be completed with a Granite Plinth for Sri Nanthi Thevar and Pali Peedam in Pancha Logam, in front of the Sannithi.

## FUTURE PERSPECTIVE

The burning desire of all great souls of Saiva Munnetta Sangam to build a Sannithi for Sri Sivagami Ammai Sametha Ananda Nadarajar in the presence of Vinayagar and Nayanmar Nalvar completed with Sri Nanthi Thevar and Pali Peedam is in the final stages of fruition. The Kumba Abishegam [Installation Ceremony] for all Moorthys, Sri Nanthi Thevar and Pali Peedam is due to commence on 17 June 2008, continue until 21 June 2008 and culminate on 22 June 2008. The arrangements for daily Pooja, six dedicated Abishegams for Nadarajar Moorthy and Sivagami Ammaiyar and Thiruvembavai celebrations are now being planned.

I appeal to all Hindus to participate and contribute towards this Thirupani and receive his Thiru Arul.

**"Yentharo Mahanubhavulu – Andariki Vandanamulu"**
**meaning**
**"There are many great people – Tributes to all those"**

Vanakkam

Rattinam. Pathmanathan
Vice Patron / Donor
SAIVA MUNNETTA SANGAM [UK]

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே மனமேநீ வாழு நாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கில் இடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும் எரிஅகலும் கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூ ர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாம் அன்றே!

கோயில் - சுந்தரமூர்த்தி சுவாமிகள்

# இனிதே பிறவி

க. உமாமகேசுவரன்

திருக்காளத்தி என்ற சிவஸ்தலத்துக்குப் பத்தர் ஒருவர் வருகிறார். தல நாயகராகிய சிவபிரான் திருமுன்பு வந்து நிற்கிறார். எம்பிரானின் திருவுருவப் பொலிவில் ஈடுபட்டுத் தம்மையே இழந்த அந்தப் பத்தர் தமக்குத் தாமே பேச ஆரம்பித்துவிடுகிறார். அவரது பேச்சில் அவரது உள்ளத்துணர்ச்சிகளெல்லாந் தெள்ளத்தெளிவாகப் புலப்படுகின்றன. அடாடா! என்ன காரியம் செய்துவிட்டேன். திருக்காளத்தி என்ற சிவஸ்தலத்துக்கு இத்துணை நாளும் வாராது இருந்துவிட்டேனே. காளத்தி அப்பருடைய கடைக்கண் நோக்குக்குப் பாத்திரனாகும் பாக்கியத்தை இழந்துவிட்டேனே. நம்மீதுள்ள அளப்பரும் கருணையினால் நம்மையும் ஒரு பொருளாக மதித்து நமக்கருள் புரியவென்றே இறைவன் எழுந்தருளியிருக்கும் காளத்தி அல்லவா அது?

"நம்பால் மதித்துறையும் காளத்தி"யை நண்ணாதே இருந்துவிட்டேன். அது ஒன்று மட்டுந்தானா நான் செய்துவிட்ட தவறு? இன்னும் எத்துணை, எத்துணை! அன்றலர்ந்த மலர்களைத் தூவி அவன் பாதமலர்களைப் பணிந்தேனில்லையே!

> "வம்பார் மலர்தூஉய் வணங்காதே" ஒழிந்தேன்.
> சரி. வள்ளுவன்,
>
> இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
> பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னானே. பொருள்சேர் புகழ் புரிதல் என்றால் என்ன? இறைவனது புகழை எப்பொழுதும் சொல்லுதல் அன்றோ. அதையாவது செய்தேனா? இல்லையே! "நம்பா நின் சீலங்கள் ஏத்தாதே" வாளா இருந்துவிட்டேனே. இப்படியெல்லாம் நடந்துகொண்ட யான் தீவினையேன்தான், சந்தேகமில்லை.

காளத்தி என்ற தலத்தைச் சேராதும், மலர் தூவிக் காளத்தியப்பரை வழிபடாதும், தன்னொப்பாரரில் அப்பரான அவர் புகழைப் பேசாதும் கழித்துவிட்ட நாள் அத்தனையும் பிறவா நாள்களே. "காலங்கள் போன கழிந்து". இப்படியெல்லாம் உருகுபவர் வேறு யாருமல்லர். சிவபத்த சிரோமணியாகிய நக்கீரதேவநாயனாரே அவர். வெள்ளமாகப் பெருகிவரும் தமது உள்ளத்து ஏக்கங்களையெல்லாம் வெண்பாவெனும் வெள்ளிப்பேழை ஒன்றிலே தேக்கித் தருகிறார் அவர். நம் எல்லோரதும் உள்ளங்களில் எழவேண்டிய ஏக்கங்களின் பிரதிபலிப்பாக அவ்வெண்பா அமைந்திருக்கிறது என்பதே அதன் தனிச்சிறப்பாகும்.

நம்பால் மதித்துறையுங் காளத்தி நண்ணாதே
வம்பார் மலர்தூஉய் வணங்காதே - நம்பாநின்
சீலங்கள் ஏத்தாதே தீவினையேன் யானிருந்தேன்
காலங்கள் போன கழிந்து

காலங்கள் வீணே கழிந்துவிட்டனவே என்று நக்கீரதேவநாயனார் கலங்கியபோதும் கடைத்தேறிவிடலாம் என்ற நம்பிக்கையை மட்டும் அவர் இழந்துவிடவில்லை. பிறவி வீண்தானா என்று ஏங்கியவர், காளத்தி நாதன் அடி பேணித்தொழ ஒரு வாய்ப்புத் தருவது இந்தப் பிறவிதானே. எனவே இப்பிறவியில் எஞ்சியுள்ள நாள்களையாவது பத்திநெறி நிற்கப் பயன்படுத்துவதன்மூலம் பயன்மிக்க வாழ்வு வாழ்ந்துவிடலாமே, பயன் பெறலாமே என்றெல்லாம் எண்ணுகிறார், இனிதே பிறவி என்று குதூகலிக்கிறார்.

இனிதே பிறவி இனமரங்கள் ஏறிக்
கனிதேர் கடுவன்கள் தம்மில் - முனிவாய்ப்
பிணங்கிவரு தண்சாரற் காளத்தி பேணி
வணங்கவல்ல ராயின் மகிழ்ந்து

காலங்கள் பல பயனின்றிக் கழிந்துவிட்டன, உண்மைதான். ஆயின் இன்னமுங் காலந் தாழ்ந்துவிடவில்லை. இன்றுமுதல் இறைவனை வணங்குவது என்று ஏற்படுத்திக்கொண்டாலும் போதுமே. பிறவி எடுத்த பயன் கிடைத்துவிடுமே. பிறவி சுமை என்றில்லாமல் இனிது என்றாகிவிடுமே என்று மிக்க ஆராமையோடு கேட்கிறார் நக்கீரதேவநாயனார்.

பாஞ்சசன்யமாய் முழங்கும் அவர் அறிவுரை செவிடன் காதிற் சங்காகிவிடாது காப்போம்; களிப்படைவோம்.

# தன தானிய வாசம்



பிரதிட்டை செய்யுமுன் விக்கிரகங்களைத் தயார் செய்யும் கிரியைகளுள் ஒன்று தன தானிய வாசம் என்பது. தானியத்திலும், நாணயத்திலும் திருவுருவை இட்டு நாற்பத்தியெட்டு நாள்கள் வைத்திருப்பர். இந்த ஆரம்பக் கிரியை சங்கத்தில் நிறுவப்படவிருக்கும் ஸ்ரீ சிவகாம சுந்தரி உடனுறை ஸ்ரீ ஆனந்த நடராச மூர்த்திக்கும் விநாயகருக்கும் கடந்த ஏப்பிரல் மாதம் 30ம் திகதி (சித்திரை சதயம்) அப்பர் குருபூசை தினத்தன்று சங்க மண்டபத்தில் நடைபெற்றது. சிவஸ்ரீ நாகநாத சிவன் குருக்கள், சிவஸ்ரீ தேவ்யோகேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ பாலவசந்தன் குருக்கள், சிவஸ்ரீ சங்கரக் குரக்கள், சிவஸ்ரீ கணேசக் குருக்கள் ஆகிய சிவாசாரியர்கள் இந்த நிகழ்வை சிறப்பாக நடத்தினார்கள்.

# சம்ஸ்கிருத மொழியின் சிறப்பும் தத்துவமும்

ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்தசர்மா,
சிரேஷ்ட விரிவுரையாளர், சம்ஸ்கிருதத்துறை, யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

## தோற்றம்

வரலாற்றாசிரியர்களால் நான்காயிரம் ஆண்டு தொன்மை வாய்ந்த இலக்கியங்களைக் கொண்டிலங்கும் மொழியாகக் கருதப்படினும் கூத்தப்பிரானது வலக்கையில் அமைந்த உடுக்கு அசைவினால் ஏற்பட்ட ஒலித்திரள்களின் அசைவுகளினாலேற்பட்ட மஹேஸ்வர சூத்திரங்கள் என்று அழைக்கப்படும் பதின்நான்கு சூத்திரங்களிலே சம்ஸ்கிருதத்தின் எல்லா எழுத்துக்களையும் காணலாம் என்ற தெய்விக வரலாறு இதன் தொன்மையையும், தோற்றத்தையும் புலப்படுத்துகின்றது.

சம்ஸ்கிருத மொழியில் தோன்றிய வேத இலக்கியங்கள் உலகில் காணப்படும் இலக்கியங்களுள் பழமை வாய்ந்தவை. மனிதனால் ஆக்கப்படாததால் சிறப்பாக "அபௌருஷேயம்" என அழைக்கப்படுகின்றது. தெய்விக நூல்களாக இவை போற்றப்படுகின்ற தன்மையும் "சம்ஸ்கிருதம் நாம தேவீ வாக்" எனத் தண்டி ஆசிரியர் இறைத்தன்மையுடன் இணைத்துக் கூறியிருப்பதும் இம் மொழியினது தொன்மையையும், தோற்றத்தையும் மேலும் எடுத்துக் காட்டுகின்றது.

## மொழியின் தன்மை

வேத இலக்கியங்களிலே பயிலப்பட்ட மொழி வைதிகமொழி எனவும் கி.மு. 6ஆம் நூற்றாண்டுக்குப் பின் பாணினி என்னும் இலக்கண ஆசிரியரால் செம்மைப்படுத்தப்பட்டமொழி சம்ஸ்கிருதம் எனவும் அழைக்கப்படுகின்றது. இவ்விருமொழிகளும் தமக்கெனத் தனித்தனியே இலக்கண விதிமுறைகளைக் கொண்டு விளங்குவன. இவை ஒரே அடிப்படையில் தோன்றி வளர்ந்து வரும்போது ஏற்பட்ட இருநிலைகளே.

## வைதிகமொழி

மிகவும் முற்பட்ட இம்மொழி உரியவாறு ஸ்வரங்களை அமைத்து உச்சரிக்கும் முறை, படிக்கும்போது குரலை உயர்த்தியும், தாழ்த்தியும், சமநிலைப்படுத்தியும் ஓதப்படுவது என்பன இம்மொழிக்குரிய சிறப்பாகக் காணப்படுகின்றன. இத்தன்மை வேதங்களிலேயே சிறப்பாகப் பேணப்பட்டு வருகின்றது. தமக்கென ஒரு தனித்த இயல்புடையதாக நிறைந்த மொழிவளமும், கருத்துவளமும் நிரம்பியதாகப் பெரும்பாலும் சமயத் தொடர்புடன் கூடியதாக இம்மொழி விளங்குகின்றது.

## சம்ஸ்கிருதம்

சம்-நன்கு, கிருதம்-செய்யப்பட்டது என்னும் கருத்தினையுடைய இம் மொழியின் தந்தையாக பாணினி என்னும் இலக்கண ஆசிரியர் கருதப்படுகின்றார். பாணினி ஆசிரியரால் நன்கு இலக்கணம் அமைத்து

ஒழுங்கு செய்யப்பட்ட செம்மைப்படுத்தப்பட்ட மொழியே சம்ஸ்கிருதம் ஆகும். பெரும்பாலும் உலகியல் சார்புடைய இலக்கியங்களைக் கொண்டிலங்கும் மொழியாக இருப்பினும் கர்'ணம் முதல் பிரதி'டை வரை, பிரதி'டை முதல் உற்சவம் வரை, உற்சவம் முதல் பிராயச்சித்தம் வரையான ஆலய அமைப்பு, கிரியை நடைமுறை ஆகியவைகளைக் கூறுகின்ற சமய இலக்கியங்களினைக் கொண்டு விளங்குகின்ற சிறப்புடையதாக இம்மொழி விளங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## இந்தோ ஐரோப்பியக் குடும்பமொழி

மேலை நாட்டவர்களினால் சம்ஸ்கிருத மொழி பற்றிய ஆராய்ச்சியானது பல்வேறு பரிமாணங்களிலே இடம்பெற்றது. இம்மொழியோடு ஏனைய மொழிகள் கொண்டுள்ள தொடர்புகளை ஒப்பியல்கண்டு இந்தோயூரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தமொழி என மொழியியல் அறிஞர்கள் சம்ஸ்கிருத மொழியைக் குறிப்பிடுகின்றனர்.

## வரிவடிவம்

நாகர எழுத்து வடிவம், கிரந்த எழுத்து வடிவம் என இரு வரிவடிவங்களைக் கொண்டதாக சம்ஸ்கிருத மொழி விளங்குகின்றது. இந்த இரு எழுத்து வடிவங்களும் அழைக்கப்பட்டு வரும் முறையிலிருந்தே இவற்றின் தோற்றம் - தொன்மை என்பன பற்றி நாம் உணரக்கூடியதாக உள்ளது. இவற்றில் நாகரலிபி வடிவம் தேவநாகரி எனவும் கிரந்த லிபி வடிவம் பல்லவக்கிரந்தம் எனவும் மரபுரீதியாக அழைக்கப்பட்டு வருவதனை நாம் நோக்கலாம். மேல்நாட்டு அறிஞர்கள் தமது ஆராய்ச்சி முறைமைகளுக்கு உரோமன் வரிவடிவ அமைப்பில் பயன்படுத்தி வருவதனையும் நோக்கலாம்.

## மொழியின் சிறப்பு

சிறந்த இலக்கண முறைமையுடன் கூடியதாகவும், பல்வேறு வகையான இலக்கியங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குவதும் ஒரு மொழிக்குரிய சிறப்பாகும். இவ்வகையில் சம்ஸ்கிருத மொழியினை நோக்கும்போது இம்மொழியானது பாணினி இலக்கண முறைமைக்குட்பட்டதாக செம்மைப்படுத்தப்பட்ட மொழியாக விளங்குகிறது. அத்துடன் தொல் இலக்கியமான நான்கு வேதங்கள், பிராமணங்கள், ஆரணியகங்கள், தத்துவக் கருத்துக்கள் நிறைந்த உபநிடதங்கள் என்பவற்றுடன் பிரம்ம சூத்திரம், காமசூத்திரம், சுல்வசூத்திரம் (கணிதநூல்), கிருஹ்யசூத்திரம் (இல்லறக் கிரியை பற்றிக் கூறுவது) முதலிய சூத்திர இலக்கியங்களையும் அர்த்தசாஸ்திரம் (பொருள்நூல்), தர்மசாஸ்திரம் (அறநூல்) போன்ற இலக்கியங்களையும் இராமாயணம், மஹாபாரதம் என்னும் உலகம் போற்றும் இரு பேரிதிஹாஸங்களையும் கொண்டு விளங்குவதுடன் உலகின் சிறந்த நூலான பகவத்கீதையையும் தன்னுள் கொண்டு விளங்குகிறது. வைத்திய நூல்களான சரசசம்ஹிதை, சுஸ்சுருதசம்ஹிதை, என்பவற்றோடு சோதிட நூல்கள், பதினெண் புராணங்கள், உபபுராணங்கள், பஞ்சதந்திரம், இதோபதேசம் போன்ற நீதிக்கதைகள், கதாசரித்சாகரம், பிருஹத்கதா போன்ற மக்கள் கதைகள், காவியங்கள், நாடகங்கள், உரைநடை இலக்கியம், சம்பூவகை இலக்கியங்கள், அணியிலக்கண நூல்கள், இலக்கண நூல்கள், தத்துவ நூல்கள் ஆகிய பரந்த இலக்கியங்களைக் கொண்டு இம்மொழி விளங்குவது மொழியினது சிறப்பான தன்மையினைப் புலப்படுத்துகின்றது. மேலும் சமயவழிபாட்டின் ஆதார நூல்களாக விளங்குகின்ற ஆகமங்கள், பத்ததிகள், ஆலய அமைப்பு பற்றிக்கூறுகின்ற நூல்கள், விக்கிரகவியல் பற்றிய நூல்கள் எல்லாம் வடமொழி இலக்கியப் பரப்பில் காணப்படுவது மேலும் ஒரு சிறப்புக்குரிய தன்மையாகும்.

# மொழியின் தத்துவம்

இத்தகைய சிறந்த இலக்கியவளமுள்ள சம்ஸ்கிருதமொழி இலக்கியங்களினூடு புலப்படுத்தப்படும் பண்பாட்டு விழுமியங்கள் மொழியினுடைய தத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன. எல்லாவிதமான கலைகளுக்கும், அறிவுகளுக்கும் மூலமாக விளங்குகின்ற இலக்கியங்களையுடைய இம்மொழி தனது பண்பாட்டு அம்சங்களினால் இன்றும் ஒரு வாழும் மொழியாகத் திகழ்ந்து வருகின்றது. அரசியல். நீதி, கணிதம், விஞ்ஞானம் போன்ற அறிவு சார்ந்த துறைகளில் சம்ஸ்கிருத மூலநூல்களின் பங்களிப்பும் தென்கிழக்கு ஆசியாவிலும் அதற்கு அப்பாலும் பரந்து செல்வாக்குச் செலுத்தியுள்ள இராமாயண கலாசாரமும் பண்பாடும் இவ் உண்மையை எடுத்துக் காட்டுகின்றன.

மக்களினுடைய மனதைப் பண்படுத்துவதிலும் ஆன்மிக நெறியில் நின்று அமைதியான வாழ்வு, உள ஆரோக்கியம் என்பவற்றை அடைவதற்கு ஜபம், தியானம், யோகம், தோத்திரம் போன்ற பல நிலைகளினூடும் வாழ்வைச் செம்மைப்படுத்துவதற்கும் சம்ஸ்கிருதப் பண்பாடும் அதன் இலக்கிய அம்சங்களும் பெரிதும் துணைபுரிகின்றமை நிதர்சனமாகும்.

இலக்கிய வளமுள்ள இம்மொழி இந்துக்களின் புனித மொழியாகவும் ஆன்மிக மொழியாகவும் விளங்குகின்றது. மனதைத் தூய்மைப்படுத்திச் சரீரத்தை வசப்படுத்தவல்ல ஓசைகளை ஏற்படுத்தும் வகையில் சம்ஸ்கிருத மொழியும் எழுத்துக்களும் மந்திரங்களும் ஆக்கப்பட்டுள்ளன. வாதுளாகமத்தில் இரண்டாம் படலமாகிய வர்ணபேதப் படலத்தில் எழுபத்து மூன்று பாடல்களில் எழுத்துக்களின் தன்மை பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சம்ஸ்கிருத மொழி எழுத்துக்கள் அவற்றின் அதிதேவதைகள் பற்றியும் அகாரம் முதல் அ:்காரம் வரையான ஐம்பத்தொரு எழுத்துக்களையும் ஆண், பெண், அலி (இரண்டும் கலந்த) எழுத்துக்கள் என வகைப்படுத்தி ஒவ்வொரு எழுத்துக்களுக்குமுரிய பெயரையும், வடிவத்தையும், தத்துவத்தையும் அதிதேவதையையும் விளக்கமாகக் கூறி தெய்விகமொழி என்னும் சிறப்புக்கு ஏற்ப மந்திரபூர்வமாகக் கொள்ளப்படும் தன்மையை விளக்குகின்றது. ஒவ்வொரு தனி எழுத்துக்கும் அவற்றினை உச்சரிக்கும் முறைமை, எழுத்தின் தன்மைகள் என்பவற்றைக் கொண்டு அவைகளினாலேற்படும் பலன்கள் பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சிவனுக்கும் உமைக்கும் இடையே உரையாடல் வடிவிலமைந்த தந்ராபிதானம் என்னும் நூலில் ஒவ்வொரு எழுத்துக்களுக்கும் உரிய வகையில் ஒவ்வொரு தெய்வங்களின் இணைந்த தன்மை கூறப்படுகின்றது. பூதடாமரதந்திரம், ருத்ரயாமளதந்திரம் என்பவற்றில் எழுத்துக்களுக்கு வடிவம் கூறப்பட்டு, எழுத்துக்களுக்கு தத்துவார்த்தம் கற்பிக்கப்பட்டு அவை பஞ்சபூதங்களோடு இணைத்துக் கூறப்படுகின்றன.

இத்தகைய இலக்கிய வளமும் சிறப்பும் கொண்ட தத்துவார்த்தமான சம்ஸ்கிருதமொழியும் அதன் பண்பாட்டு விழுமியங்களும் இன்றும் ஒரு வாழும் மொழியாக சம்ஸ்கிருத மொழி விளங்குகின்றமையை புலப்படுத்தி நிற்கின்றது.

"மந்திபோல் திரிந்து ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயன் அறிகிலா
அந்தகர்க்கு எளியேன் அலேன்"

திருஞானசம்பந்தர்



# தென்னாட்டுத் திருமுறைத் தலங்கள்

- திரு ச. வேதநாராயணன்

தமிழ்நாட்டு அறநிலையத்துறை 2003ம் ஆண்டு கணக்குப்படி தமிழ்நாட்டில் 36350 திருக்கோயில்கள் உள்ளன. இவற்றுள் சுமார் பதினாயிரம் சிவன் கோயில்களும் அடங்கும் என்று பொதுவாக நம்பப்படுகிறது. சிவத்தலங்களுள் சிலவற்றைப் பார்ப்போம்.

7ம் நூற்றாண்டுக்கு முன் சைவ. சாக்கிய. சமண மதங்கள் ஒன்றுக்கொன்று கொடும் போர்களில் ஈடுபட்டன. ஒவ்வொன்றும் வெவ்வேறு காலநிலைகளில் ஆதிக்கம் செய்தன. மன்னர்கள் இதனுள் ஏதாவது ஒரு மதத்தைத் தழுவி மற்ற மதங்களுக்கு ஊறு விளைவித்தனர். ஆனால் ஆறாம் நூற்றண்டின் இறுதியில் சைவமதத்தின் சிறப்பு ஓங்கியது. பத்தி இயக்கம் தோன்றியது.

சைவத்தின் சிறப்பைப் பரப்பி அதை நிலைபெறச்செய்த பெருமை திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், (ஏழாம் நூற்றாண்டு) சுந்தரமூர்த்தி (எட்டாம் நூற்றாண்டு) ஆகிய மூவரையும் சேர்ந்தது. அவர்கள் பல சிவத்தலங்களுக்கு யாத்திரை செய்து. அத்தலத்துச் சிவன்மேல் பத்திப் பாடல்களைப் (hymns) பாடினர். ஒவ்வொரு தலப் பாடல்களிலும் பொதுவாகப் பத்துப் பாடல்கள் (verses) இருக்கும். இவைகளுக்குப் பதிகம் என்று பெயர். சில பதிகங்களில் பலசுருதியைச் சேர்த்து பதினோரு பாடல்கள் இருக்கும். இந்த பத்திப்பாடல்கள் கோயில் வளாகத்தினுள்ளோ (temple precincts). தலங்களின் வெளியிலிருந்தோ அல்லது வெகு தொலைவிலிருந்தோ பாடப்பட்டவை. திருப்பூவணம். திருவாலங்காடு போன்ற புண்ணியத் தலங்களை காலினால் மிதிக்க அஞ்சி வெளியிலிருந்தே இறைவனைப் பாடினர். கேதாரம். கைலாயம். கோணேஸ்வரம் போன்ற இடங்கள் தமிழ் நாட்டிலிருந்தே இம்மூவராலும் பாடப்பட்டன. இவர்கள் பாடிய தலங்களுக்குத் திருமுறைத் தலங்கள் என்று பெயர். மொத்தம் 276 திருமுறைத் தலங்கள் உள்ளன. இவற்றுள் தமிர்நாட்டில் மட்டும் 267 தலங்கள் உள்ளன.

மேலும். தங்களுடைய பாடல்களில் வேறு தலங்களின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளனர். மாணிக்கவாசகப் பெருமானும் தன்னுடைய திருவாசகத்தில் பல ஊர்களைக் குறிப்பிட் டுள்ளார். இந்த ஊர்கள் வைப்புத்தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. சில வைப்புத்தலங்கள் திருமுறைத் தலங்களாயும் உள்ளன. சில வைப்புத் தலங்களின் தற்காலப் பெயர்கள் தெரியவில்லை.

இப்பதிகங்கள் பாடப்பட்டபோது எழுத்தர்களால் அவை பனை ஓலைகளில் படி எடுக்கப்பட்டன (copied by the scribes). இவைகள் சேகரிக்கப்பட்டு சிதம்பரம் கோயிலில் ஒரு அறையில் போடப்பட்டன. அந்த அறை பூட்டப்பட்டது. பதினோராம் நூற்றாண்டு வரையில் அவ்வறை திறக்கப்படவில்லை. அந்தக் காலக்கட்டத்தில் அந்தப் பனை ஓலைச்சுவடிகள் பொடியாயின. கறையான்களால் அரிக்கப்பட்டன. பதினோராம் நூற்றாண்டில் அவ்வறையிலிருந்து ராஜராஜ சோழன் மீட்டது (salvaged) ஒரு சிறு பகுதியே.

தற்போது நம்மிடம் உள்ளவை 383 திருஞானசம்பந்தர் பதிகங்கள், 312 திருநாவுக்கரசர் (அப்பர்பெருமான்), 100 சுந்தரர்

பதிகங்கள் ஆகும். இவையெல்லாம் பொதுவாக தேவாரம் என்று கூறப்பட்டாலும். சம்பந்தருடைய பாடல்கள் திருக்கடைக்காப்பு என்றும். அப்பருடையது தேவாரம் என்றும் சுந்தரருடையது திருப்பாட்டு . என்றும் பெயர் பெறும். மாணிக்கவாசகருடைய 51 பாடற் தொகுதிகள் (இவற்றில் முதல் நான்கும் ஒரு பாடல்மட்டும் உள்ளவை) திருவாசகம் ஆகும். பக்திச்சுவையைத் தவிர இப்பாடல்கள் இயற்கை வர்ணனைக்கும். அழகிய தமிழ்ச் சொற்றொடர்களுக்கும். ஆன்மிகக் கருத்துக்களுக்கும் பெயர் பெற்றவை.

பதின்மூன்றாவது நூற்றாண்டில் சந்தானகுரவர்களில் ஒருவரான உமாபதிசிவம் இந்த 276 தலங்களையும் வகைப்படுத்தினார். இதன்படி இவை தொண்டைநாட்டுத்தலங்கள் (32-33,). நடுநாடு (22). பாண்டியநாடு (14). கொங்குநாடு (7). காவிரி தென்கரை (128). காவிரி வடகரை (63). வடநாடு (5). துளுவ நாடு (1). மலைநாடு (1). ஈழநாடு (2) எனப் பட்டியலிடப்பட்டன. வைப்புத் தலங்கள் 200க்கு மேல் உள்ளன.

இந்த 276 தலங்களில் அளவில் மிகப் பெரியவை. அளவில் சிறியவை. மலையுச்சியில் உள்ளவை. மலை அடிவாரத்தில் உள்ளவை. ஆறு - கடலின் அருகில் உள்ளவை. கட்டுமலையின் மேல் உள்ளவை (மாடக்கோயில்கள்). மக்கள் நெரிசலில் உள்ளவை. ஏறக்குறைய மக்களே இல்லாத இடங்களில் உள்ளவை எனப் பலவகை உண்டு. பொதுவாக இவை குறைந்தது 1400 ஆண்டுகளுக்கும் மேலாக இருப்பவை. சில கோயில்கள் புத்தம் புதிதாகக் கட்டப்பட்டவை. காரணம் பல. திருவெண்பாக்கம் கோயில் சத்யமூர்த்தி நீர்த்தேக்கத்திற்காக வேறு இடத்தில் கட்டப்பட்டு. பழைய கோயில் மூழ்கடிக்கப்பட்டது. வெஞ்சமாக்கூடல் கோயில் வேடசந்தூர் அணை உடைந்ததால் அடித்துச் செல்லப்பட்டது. கூடலையாற்றூர் ஆலயம் ஆறுகளின் வெள்ளத்தில் அழிந்தது. இத்தலங்களில் நகரத்துச் செட்டியார்களால் திருப்பணி செய்யப்பட்ட கோயில்கள் பல.

சில கோயில்களில் அற்புதமான சிலைகளும். மூர்த்திகளும். தூண்களும். மண்டபங்களும் உள்ளன. பழங்கால ஸ்தபதிகள் சிலவகையான வேலைப்பாடுகளைத் தவிர்த்து மற்ற வேலைகளைச் செய்ய ஒத்துக் கொண்டார்கள். திருப்பெருந்துறை கொடுங்கை. திருவீழிமிழலை வாவல் நெற்றி மண்டபம். திருநனிப்பள்ளி கருவறை விமானம் போன்ற வேலைப்பாடுகள் தவிர்க்கப்பட்டன.

பல தலங்களுக்குத் தலபுராணம். தெய்விகச்செயல் நிகழ்ச்சிகள் உண்டு. உற்சவ காலங்களில் இவைகள் விழாக்களாக இடம் பெறும். உதாரணம் திருச்சியில் செட்டிப்பெண் மருத்துவம். திருச்செங்காட்டங்குடியில் பிள்ளைக்கறி உற்சவம். அம்பர் மாகாளத்தில் கிராதக வேட உற்சவம். கோளிலி நெல் உற்சவம் போன்றவை.

இத்தலங்ளைத் தவிர பல்லவர்கள். சோழர்களால் கட்டப்பட்ட கோயில்களும் உண்டு. காஞ்சி கைலாசநாதர் கோயில். ராஜராஜன். ராஜேந்திரனால் கட்டப்பட்ட பிரமிட் விமானக் கோயில்கள் பிரசித்தி பெற்றவை.

சில வைப்புத்தலங்கள் மிகவும் அழிவுற்றுக் கிடக்கின்றன. ஆனால் திருமுறைக் கோயில்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது. புதுப்பிக்கப்படும்போது பழைய அழகு. கல்வெட்டுக்கள் மறைந்து விடுகின்றன.


இறைவன் அருளால் தமிழ்நாட்டில் உள்ள 267 தலங்களையும் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அக்கோயில்களில் எடுத்த படங்களில் சில இங்கே காண்பிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து வரும் இதழ்களில் இந்த அநுபவம் பற்றி எழுதவுள்ளேன்.

# புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பழைய கோயில்கள்


# மண்டபங்கள்



திருவெண்பாக்கம்




இராமேச்சுரம்




வெஞ்சமாக்கூடல்



திருவாடானை



கூடலையாற்றூர்



சத்திமுற்றம்

# கோயிலும் கலைகளும்

ஆலயங்கள் கலைகலாசாரத்தின் உறைவிடங்களாகும். சித்தர்கள்: "கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா கோயிலுங் குளங்களும் கும்பிடும் குலாமரே, கோயிலும் மனத்துள்ளே குளங்களும் மனத்துள்ளே" என்று பாடலாம்.

ஆனால் பாமரமக்களாகிய எங்களுக்குத் தெய்வம் இருக்கும் இடமொன்று தேவை எனக்கருதி முன்னோர்கள் கோயில்களைக் கட்டி எழுப்பினார்கள். ஆன்மிக வளர்ச்சிக்குரிய கலைகளையும் அங்கே வளர்த்தனர். சமயகோடிகள் எல்லாம் எமது தெய்வம் என்று எதிர்வழக்கிட நின்ற பரம்பொருள் எதுவோ அதனை அடைய ஒவ்வோர் வழியையும் அமைத்தனர். பொதுவாக எல்லா மதத்தினரும், அவரவர் கடவுளை வழிபட ஓரிடமுண்டு. ஆலயங்களை அவரவர் மதக்கோட்பாட்டுக்கமைய பெயர் வைத்துக்கொள்கிறார்கள்.

**நாதஸ்வரவித்துவான்**
**அளவையூர்.இ.கேதீஸ்வரன்.**

எமது ஆலய முறைகளில் மெய்ஞ்ஞானமும், விஞ்ஞானமும் நிறைந்துள்ளன. தொகுத்துப்பார்ப்பது மெய்ஞ்ஞானம். பகுத்துப்பார்ப்பது விஞ்ஞானம். ஒன்றைப் பலவாகக்காண்பதும் விஞ்ஞானம். முருகன் மயில்மீது ஏறி உலகத்தைச் சுற்றிவந்து ஒன்றைப் பலவாகக் கண்டார். பலவற்றை ஒன்றாகக் காண்பது மெய்ஞ்ஞானம். கணபதி சிவன் சக்தியை வலம் வந்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கண்டார் இது மெய்ஞானம்.

ஆலயங்களில் நிகழும் பூசை, ஆராதனை போன்றவை நாடு முழுமைக்கும் நன்மை விளைவிப்பதும். தாவரங்கள் முதல் தேவர்கள் வரை சகல தரப்பினருக்கும் வளம் சேர்ப்பதும் ஆன்றோர்கள் மனங்களுக்குப் புலனாகும் உண்மைகளாகும். ஆலய வழிபாடுகளில் பலவித கலை அம்சங்களையும் இவர்கள் சேர்த்துக் கொண்டனர். இதன் பிரகாரம் தத்தமது கலை, கலாசாரம், நாகரிகம் முதலியனவற்றைப் பேணி வருகிறார்கள்.

பழைய காலத்தில் சைவ ஆலயங்கள், வைஷ்ணவ ஆலயங்கள் போன்றவற்றில் மக்களுக்கு நல்வழி கூறுவதற்காக மகாபாரதம், இராமாயணம், பெரியபுராணம், கந்தபுராணம் போன்றவற்றைக் கதையாகச் சொல்லும் நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பெற்றன. இசை, நடனம், நாடகம், கூத்து முதலியன தெய்வ சம்பந்தமாகவே நிகழ்த்தப்பெற்றன.

மக்கள் தத்தமது தொழில்களைச் செய்வது, ஆலயதரிசனம் செய்வது, நல்ல விஷயங்களைக் கேட்பது முதலியனவே அவர்களின் செயற்பாடாக விளங்கியது.

இதனால் மக்கள் நீதி, நேர்மை, பத்தி நிறைந்த யோக்கியர்களாக வாழ்ந்தனர். ஆனால் இன்று தேசம் எப்படி இருக்கிறது. பொய், லஞ்சம், கலப்படம், அதர்மம் போன்றன மிகுந்துவிட்டன. இதனை நிவர்த்தி செய்யப் பழைய காலங்களைப் போல், கோயில்களைச் சமூக வாழ்வின் மத்திய நிலையாக்கித் தெய்வ சம்பந்தமான கலைகளை வளர்க்கவேண்டுமென ஸ்ரீகாமகோடிப் பெரியவர் கூறிய கருத்தை இங்கே குறிப்பிடுகின்றேன்.

ஆனால் சில ஆலயங்களில் நிகழ்த்தப்பெறும் இசை, ஆடல் பாடல் போன்றவை பேரின்பம் குறைந்து சிற்றின்பம் மிகுந்து காணப்படுகின்றன.
"சென்ற இடத்தால் செலவிடாது தீதுஓரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு"

என்ற வள்ளுவர் கருத்திற்கமைய மனத்தினைத் தூயசிந்தனைகளோடு நிறுத்தி நல்லவையே செயலிலும் காட்டி வருவோமானால் இடுக்கண் வராது தவிர்த்துக் கொள்ளலாம்.

நமது சமுதாயத்தைப் பாதுகாக்க உதவிய நிலையங்களில் திருக்கோயில்களே முக்கிய இடம் பெறுகின்றன. இவைகள் கலைக்கோயில்களாயும் விளங்குகின்றன. ஆபரணங்கள் செய்வது, மாலைகட்டுவது, தேர்நிர்மாணிப்பது, கோபுரங்கள் அமைப்பது எல்லாமே கோயிலை மையமாகக்கொண்டு வளர்ந்தவைகள் ஆகும். இறைவனுக்குக்

கைங்கரியம் செய்கின்றோம் என்ற மனப்பக்குவத்துடன் வளர்ந்தவையே இக்கலைகளாகும்.

இவ்வாலயங்களிலேதான் வேதபாடசாலைகள், தேவாரதிவ்யபிரபந்தங்கள் ஓதுதல், புராணபடனம் படித்தல், நற்சிந்தனைகள், ஆராய்ச்சி மன்றங்கள் நடந்தன. கோயிற்பணிபுரியும் நாகசுரம், தவில் போன்றனவும், ஆடல், பாடல் போன்றனவுமான கலைகளும் வளர்ந்தன. இத்துடன் அரிய நூல்களைச் சேகரித்தும் தொல்பொருள்களைப் பாதுகாத்தும் கலைக்கூடங்கள் அமைந்து இருந்தன. அது மட்டுமா? ஆபத்துக் காலங்களில் காப்பரண்களாயும் கோட்டைகளாயும் விளங்கி நின்றன. முற்காலத்தில் கோயில்களில் அதுலர்ச்சாலை என்னும் மருத்துவப்பிரிவு அமைந்திருந்தது. இதில் மருத்துவ தாதிமார்களும் பணியாற்றினர். தமிழ் மக்களின் பெருமை, பண்பு, கலை, கலாசாரம், தூயவாழ்க்கை போன்றன மேலைநாட்டு அறிஞர்களும் போற்றும் வண்ணம் நிலைபெற்றிருந்தன.

ஆனால் இன்று பெருமைப்படத்தக்க வகையில் அவ்வளவு இல்லை. மதமாற்றங்கள், பத்திக்குறைவு, கோயிற் சொத்தை அநுபவிப்பது குலநாசம் என்ற எண்ணம் மீறப்பட்டமை, விக்கிரகங்களைக் களவாடல், தருமம், அதர்மம், பாவம், புண்ணியம் என்ற தத்துவங்கள் மக்கள் மனத்திலிருந்து மறைந்தமை காரணமாகப் பலவித துயரங்களைச் சுமக்க வேண்டியுள்ளது. அன்று கல்வி, கலைகள் வளரக் கோயில்கள் பயன்பட்டன. ஆனால் இன்று ஈழத்தில் கோயில்கள் பல இடிந்தும் மரங்கள் முளைத்தும் கேட்பாரற்றுக்கிடக்கின்றன என்பது மிகவும் வருந்துதற்குரிய பாரதூரமான விடயமாகும்.

# கடவுள் வழிபாடு

உலகைப் படைத்தவர் கடவுள். கடந்தும் உள்ளாகியும் நிற்கும் இறைவன் என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர். எம்மைப் படைத்து, காத்து, அருள் செய்பவர் இறைவன். இறைவனை நாம் கண்களால் காணமுடியாது. அதனால் இறைவன் இல்லை என்றும் கூறமுடியாது. எமது உயிரை நாம் கண்களால் காண்பது உண்டா? இல்லையே, அதனால் நாம் உயிர் இல்லாதவர்கள் என்று கூற முடியுமா?

நமக்காக உலகைப் படைத்து, எமக்கு தேவையான எல்லாவற்றையும் உருவாக்கிய இறைவனை நாம் வழிபட வேண்டும். தினமும் கோயிலுக்குச் சென்று வழிபட முடியாதவர்கள் வெள்ளிக்கிழமைகளிலும், விசேட தினங்களிலும் கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபட வேண்டும்.

கோயிலுக்குச் செல்லமுன் குளித்து, தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து விபூதி பூசிச் செல்ல வேண்டும். கோயிலுக்குச் செல்லும் போது வெறும் கையுடன் செல்லாது அர்ச்சனைப் பொருள்களான தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, கர்ப்பூரம், பூக்கள் என்பவற்றைக் கொண்டு செல்ல வேண்டும். கை கால் கழுவி கோயிலுக்கு உள்ளே செல்ல வேண்டும். கோபுரத்தை வணங்கி உள்ளே சென்று முதலில் விநாயகரை வணங்க வேண்டும். விநாயகரை வணங்கும் போது மூன்று முறை தோப்புக்கரணம் போட்டு தலையில் குட்டி வணங்க வேண்டும். பின் மூலஸ்தான இறைவனை வணங்க வேண்டும். பின் கோயிலை வலம் வந்து ஏனைய தெய்வங்களையும் வணங்க வேண்டும். அர்ச்சனை செய்வித்த பின் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும்.இசையுடன் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் என்பவற்றையும் ஏனைய தெய்விக பாடல்களையும் பாடி இறைவழிபாட்டினைப் பூர்த்தி செய்ய வேண்டும். மெய்யன்போடு வழிபடும் அடியார்களுக்கு வேண்டும் வரங்களை வழங்கும் இறைவன் அன்பே வடிவானவர். சைவ சமயம் அன்பையே போதிக்கின்றது. இதனை விளக்க பல கதைகள் உள்ளன. நாம் நல்லவர்களாக வாழ வழி காட்டும் கடவுளை நாம் வணங்குவதற்காகவே நாம் மனிதப்பிறவி எடுத்துள்ளோம். சிறுவர்களாகிய நாம் சிறுவயது முதலே இறை நம்பிக்கையுடன் இறைவனை வணங்கி பிறவிப் பயனை அடைய நாயன்மார்கள் வாழ்ந்து காட்டிய அன்பு நெறி நின்று வாழ்ந்து காட்டுவோமாக.

செல்வி மாதுமை விபுலானந்தன் - கிங்ஸ்ரன் தமிழ் பாடசாலை

# நெதர்லாந்தில் ஸ்ரீவரதராஜ செல்வவிநாயகர் தேர் உலா





பல்லாயிரம் பக்தர்கள் புடைசூழ, ஸ்ரீவரதராஜ செல்வவிநாயகர், டென்ஹெல்டர் மாநகரில், அழகிய சித்திரத் தேரில் அமர்ந்து, வீதியுலா வருகின்ற, கண்கொள்ளா அருட்காட்சி, ஆனிமாதம் 29ம் திகதி ஞாயிற்கிழமை இடம்பெறவிருக்கின்றது.

நெதர்லாந்தின் டென்ஹெல்டர் மாநகரில், கோயில்கொண்டு, வேண்டியோர்க்கு வேண்டுவனவெல்லாம் வாரி வழங்கும் வள்ளலாக, அருளாட்சி புரிகின்ற ஸ்ரீவரதராஜ செல்வவிநாயகப் பெருமானுடைய வருடாந்த மகா உற்சவம், இம்மாதம் 21.06.2008 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, பகல் இரவு என, தினசரி இரு திருவிழாக்களாகத் தொடர்ந்து, ஒன்பதாவது நாள், விநாயகப் பெருமான் தேர் ஏறி, டென்ஹெல்டர் மாநகரில், சுமார் மூன்று கிலோ மீற்றர் தூர சுற்றளவு, வீதியுலா வருகின்றார்.

நாதஸ்வர இசை முழங்க, பெண்கள் கர்ப்பூரச் சட்டி ஏந்தி வர, காவடிகள் ஆடிவர, அரோகரா ஒலியோடு ஆண்கள் பெண்கள் வலம் இடமாக நின்று, வடம்பிடித்து இழுக்க, அன்னை பராசக்தியும், தம்பி முருகனும் தனித்தனி வாகனங்களில் இணைந்துவர, விநாயகப் பெருமான் பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுக்கின்ற அற்புத விழாவாக இத்தேர்த்திருவிழா நடைபெறவிருக்கின்றது.
வருடாந்தம் இவ்விழாவில் கலந்து கொள்வதற்காக நெதர்லாந்தின் பல்வேறு மாகாணங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கில் மக்கள் வருகை தருவதோடு, இலண்டன் உட்பட ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் இத் தேர்த்திருவிழா காண நூற்றுக் கணக்கில் பக்தர்கள் கலந்து சிறப்பிப்பது, அருள்மிகு விநாயகரது அற்புத தரிசனமாகும்.

1991ம் ஆண்டில் சிறியதோர் கட்டிடத்தில் உருவாகிய இவ்வாலயம், சைவப்பெருமக்களின் அயராத பெருமுயற்சியினாலும், விநாயகப்பெருமானது அருட்சக்தியினாலும், சொந்தக்காணியில், ஆகம விதிக்கமைவாக அமைக்கப்பட்ட, சித்திர வேலைப்பாடுகளோடு கூடிய அழகிய ஆலயமாக 2003ம் ஆண்டில் கும்பாபிஷேகம் கண்டது. இத்துடன் இவ்வாலயத்துடன் இணைந்து கலாசார மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இராஜகோபுரம் அமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.





# இலங்கையிலும், ஏனைய உலக
# 18-05-2008 இல் சங்க














# நாடுகளிலும் சமாதானம் வேண்டி மண்டபத்தில் நடைபெற்ற யாகம்









# சித்திரை வருடப் பிறப்பு 2008
# வழிபாடும் கலைநிகழ்வுகளும்



கை விசேஷம் வழங்கல்
















# என்பீல்ட் ஸ்ரீ நாகபூஷனி அம்பாள் கோயிலில் சங்கம் நடத்திய பெரியபுராண தொடர் சொற்பொழிவு நிறைவு விழா


























சிங்கம் தமிழ்க் கடை
RED LION WINE
Tel: 020 8297 8778
இலங்கை இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் உடன் மரக்கறி
மீன் வகைகள் பழ வகைகள் மற்றும் அனைத்து மளிகைப்
பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய இடம் - சிங்கம் தமிழ்க் கடை
இது ஒரு புதிய உதயம். (வாகனத்தரிப்பிட வசதியும் உண்டு)
184, Hither Green Lane, Lewisham, London, SE13 6QA

# குலச்சிறை நாயனார் குறும்பநாயனார்.

-மு.சிவராசா

கூன்பாண்டியனாயிருந்து பின்னர் நின்றசீர் நெடுமாறனாகிய பாண்டிய மன்னனின் பட்டத்துராணி மங்கையர்க்கரசியார். முதன்மந்திரி குலச்சிறை என்பவர். பாண்டியன் சமணசமயத்தைத் தழுவியிருந்தமையால் நாட்டு மக்களும் சமணசமயம் சார்ந்திருந்தனர். மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் மட்டும் சைவசமயம் சார்ந்திருந்தமை மாத்திரமன்றி நாட்டையும் சைவநெறிக்குத் திருப்பவேண்டும் என்னும் பேரவாக் கொண்டிருந்தனர்.

திருவைந்தெழுத்தை ஓதுவோர், வீபூதி உருத்திராக்கம் தரிப்போராகி தம்மை நாடிவரும் சிவனடியார்கள் தனித்துவரினும், கூட்டமாய் வரினும் குலச்சிறையார் உள்ளன்போடு எதிர்கொண்டு அவர்களுக்கு வேண்டும் பணிவிடைகள் செய்து உணவளித்து வருபவர். சிவன் திருவடிகளை என்றும் எப்போதும் சிந்தித்துத் துதித்து வருபவர். சைவத்தை வளர்ப்பதிலே பாண்டிமாதேவிக்கு உற்ற துணையாக இருந்தவர். இவர்கள் இருவரும் திருஞானசம்பந்தப் பெருமானின் பெருமையை அறிந்திருந்தனர். அப்பெருமான் திருமறைக்காட்டிலே தங்கியிருந்த காலத்தில் பாண்டிமாதேவி விரும்பிய வண்ணம் அவரை மதுரைக்கு வரவழைத்து நாட்டில் சைவம் புத்துயிர் பெற்றெழச் செய்ய வேணவாக்கொண்டார். அதன்படி குலச்சிறையார் சம்பந்தப் பெருமானுக்குத் தூது அனுப்பினார். சம்பந்தர் மதுரை நகரின் எல்லையை அடைந்தபோது, அவரை எதிர்கொண்டு அவர் ஊர்ந்து வந்த சிவிகையின் முன் நிலத்தில் தண்டாகாரமாக விழுந்து வணங்கினார். நெடுநேரம் எழுந்திராத அவரை சம்பந்தரே சிவிகையினின்றும் இறங்கி, தம் கைகளினால் தூக்கி அருள் செய்ய வேண்டியதாயிற்று.

சம்பந்தப்பெருமான் மதுரையில் ஒருமடத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தார். பொறாமை காரணமாக சமணர் அந்த மடத்துக்கு தீ மூட்டினர். இதை அறிந்த பாண்டிமாதேவியாரும் குலச்சிறையாரும் பெருமானுக்கு ஏதும் தீங்கு விளைந்தால் தாம் உயிர் துறப்பதெனத் தீர்மானித்தனர். தீங்கு ஏதும் நேரவில்லை. மன்னனுக்கு ஏற்பட்ட வெப்புநோயைச் சம்பந்தப் பெருமான் நீக்கி, சமணர்களை வாதில் வென்றார். ஏலவே இசைந்தபடி சமணர்கள் கழுவேறி உயிர் துறக்க குலச்சிறையார் உதவி புரிந்தார். மன்னனும் மக்களும் சைவசமயம் தழுவினர். ஞானசம்பந்தர் தாம் அருளிய புறநீர்மைப் பண்ணில் அமைந்த திருஆலவாய்த் திருப்பதிகம் பதினொரு பாசுரங்களுள் ஆறுதிருப்பாடல்களிலே குலச்சிறை நாயனாரின் தொண்டினை வியந்து பாராட்டியுள்ளார்.

> "நாவணங் கியல்பாம் அஞ்செழுத்தோதி நல்லராய் நல்லியல் பாகும்
> கோவணம் பூதி சாதனம் கண்டால் தொழுதெழு குலச்சிறை...."

என்பது அவர் திருவாக்கு.

சிவபத்தி அடியார் பத்திக்கு எடுத்துக் காட்டாக விளங்கி இறைவன் திருவடி அடைந்தவர்களுள் குலச்சிறை நாயனாரும் ஒருவர்.

**பெருமிழலைக் குறும்பர்**


பெருமிழலை என்னும் ஊரில் மிழலைக் குறும்பார் என்பவர் அவதரித்தார். அவர் சிவனடியார்களைக் கண்டால் எதிர்கொண்டு தமது இல்லத்துக்கு அழைத்து உணவளித்து உபசரிப்பார். அவர்களுக்கு வேண்டுவன கொடுத்து வணங்கித் தொண்டு புரிவார். இவர் காலத்தில் வாழ்ந்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். அன்னாரின் பெருமைகளை அறிந்த குறும்பர் சுந்தரமூர்த்தி சுவாமிகளை மானசீகக் குருவாக வரித்து, அன்னார் திருவடிகளையே சிந்தித்துத் துதித்து வணங்குவதை நியமமாகக் கொண்டிருந்தார். அவ்வாறு செய்வது சிவபிரானை வழிபடுவதற்குச் சமானமானது என்பதை உணர்ந்திருந்தார். இவ்வாறு ஒழுகிவந்த காரணத்தால் அணிமா முதலாய அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றார்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவஞ்சைக்களத்திலிருந்து திருக்கயிலை ஏகும் நாள் நெருங்கிற்று. அவ்வாறு அவர் கைலையை அடையும் நாளுக்கு முதல்நாளிலே அந்நிகழ்ச்சியை குறும்ப நாயனார் தமது யோக அறிவால் கண்டார். சுந்தரர் இவ்வுலகை விட்டகல தான் பிரிந்திருக்கமாட்டேன் எனத் துணிந்தார். தமது யோக முயற்சியால் பிரமரந்திரம் திறப்ப அவர் உயிர் உடலைப் பிரிந்தது. அவர் ஆன்மா கயிலையில் வீற்றிருக்கும் சிவபிரான் திருவடி நிழலில் சேர்ந்து பெருவாழ்வு பெற்றது.

சுந்தரமூர்த்தி நாயனாரைத் தமது குருவாகக் கொண்டு குருவழிபாட்டால் முத்திபெற்ற நாயன்மார்களுள் பெருமிழலைக் குறும்ப நாயனாரும் ஒருவரானார்.

-மு. சிவராசா

# TAMIL CROSSWORD PUZZLE




**Clues are in English;**

**All answers should be in Tamil**

**Down:**

1 Statue in temple

2 God

3 Father

4 Giving up

5 Motherhood

**Across:**

1 Another name for Lord Ganesha

3 Another name for Lord Ganesha

5 Giving

6 Mountain

7 Cleanliness

(கந்தபுராணச் சிந்தனைகள்)

சிந்திப்பவர் Dr சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்

# மூவர் வேண்டிப் பெற்ற வரங்கள்.

நாம் எல்லோரும் கோயிலுக்கு வருகின்றோம். வழிபாடு செய்கின்றோம். வரங்கள் வேண்டி வணங்குகின்றோம், நாம் என்ன வரத்தைக் கேட்க வேண்டும்? வேண்டிப் பெற வேண்டிய நல்ல வரங்கள் எவை? நாம் நல்லவராகவும் வல்லவராகவும் வாழவும் அவ்வாறே எம்மைச் சூழ்ந்தவர்களும் இருக்கவும் நாம் வேண்ட வேண்டிய வரங்கள் என்ன?

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்."

என்ற வள்ளுவரின் வாக்குக்கமைய நாம் தக்கார் ஆக வேண்டுமாயின் என்ன வரம் வேண்டிப் பெறல் வேண்டும்? இது அடியவர்கள் எல்லோருக்கும் உள்ள பிரசினை. கந்தபுராணத்திலே மூவர் வரம் கேட்டுப் பெறுகின்றார்கள். அவர்களுடைய வாழ்க்கையையும் அவர்களுடைய முடிவையும் அவர்களுடைய எச்சங்களையும் ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் நாம் என்ன வரம் வேண்டுதல் வேண்டும் என அறிந்து கொள்ளலாம்.

## சூரன் கேட்ட வரம்

சூரன் பெருவேள்வி செய்து சிவபெருமானை நேரே வரச் செய்கிறான். நேரே வந்த சிவபெருமான் உனக்கு வேண்டும் வரத்தைக் கேள் என்று கூறுகின்றார். சூரன் வரம் கேட்கிறான்.

"பூமியிலேயுள்ள பல உலகங்களைக் கொண்ட அண்டக்கூட்டங்களுக் கெல்லாம் நான் மன்னனாக வேண்டும். நினைத்தவுடனே அவ்வண்டங்களுக்குப் போய் வருவதற்கான வாகன வசதிகளையும் தருதல் வேண்டும். எந்நாளும் அழியாமல் இருக்கின்ற தேகத்தையுமெனக்குத் தருதல் வேண்டும். பாற்கடலிலே துயில் செய்கின்ற திருமாலே முதலான தேவர்கள் போர் செய்தாலும் தோல்வியடையாது அவர்களை வெல்லத்தக்க பெருவன்மையையும், பல படைக்கலங்களையும் அளிக்க வேண்டும். எக்காலமும் அழியாமல் இருக்கவும் வேண்டும்."

கொன்னாரும் புவிப்பாலாய்ப் பலபுவனங் கொண்டஅண்டக் குழுவுக் கெல்லாம்,
மன்னாகி யுறல்வேண்டும் அவைகாக்குந் தனியாழி வரலும் வேண்டும்
உன்னாமுன் அவையனைத்துஞ் செல்லுவதற் கூர்திகளும் உதவல் வேண்டும்
எந்நாளும் அழியாமல் இருக்கின்ற மேனியுமெற் கீதல் வேண்டும்.

வரம்பெறு படலம் 19

அலையாழி மிசைத்துயில்கூர் பண்ணவனே முதலோர்கள் அமர் செய்தாலும்
உலையாது கடந்திடுபேர் ஆற்றலோடும் பலபடையும் உதவல் வேண்டும்
தொலையாமே எஞ்ஞான்றும் இருந்திடலும் வேண்டுமெனச் சூரன் வேண்டக்
கலையார்வெண் மதிமிலைச்சுஞ் செஞ்சடிலத் தனிக்கடவுள் கருணை செய்வான்

வரம்பெறு படலம் 20

சூரன் இறைவனிடம் இவற்றோடு கூட இன்னும் பலவற்றைக் கேட்டிருக்கலாம். நற்பண்பு, நல்லொழுக்கம், இறையன்பு இவ்வாறு பலவற்றைக் கேட்டிருக்கலாம். எல்லாவற்றிலும் சிறந்த முத்தியைக் கூட வேண்டிப் பெற்றிருக்கலாம். ஆனால் கேட்கவில்லை. சிவபெருமான் கொடுத்த வரத்தின் மேன்மையால் சூரன் பெருவாழ்வு வாழ்ந்தான். அசுரகுலம் ஈடேறி மிகவும் வளமான வாழ்வை அநுபவித்தது. தேவர்கள் பெரும் இன்னல்களுக்காளானார்கள். சில காலம் எல்லாச் சிறப்புக்களோடும் வாழ்ந்த சூரன் கொடுமைகளுக்கு உறைவிடமாகி, முருகப்பெருமானால் குலத்தோடு அழிக்கப்படுகின்றான். பெருவாழ்வுக்காக அவன் நினைக்கப்படவில்லை. கொடுமைகளுக்காகவே நினைக்கப்படுகின்றான்.

## தக்கன் கேட்ட வரம்

ஒரு சமயம் பிரம்மதேவர் தன்னுடைய பிள்ளைகளுக்கு உபதேசம் செய்தார். தந்தையாரின் உபதேசத்தைக் கேட்ட தக்கன் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் செய்கிறான். சிவபெருமான் அவனுக்குக் காட்சி கொடுத்து வேண்டும் வரம் என்ன வென்று கேட்கிறார். தக்கன் வரம் கேட்கிறான். "நீண்ட பெரிய பூமியிலும், கந்தர்வர்கள் வாழ்கின்ற மேல் உலகிலும், பிரம்மா விஷ்ணு ஆகியோரின் உலகங்களிலும், திசைகளிலுள்ள எல்லா இடங்களிலும் என் ஆணை செல்ல வேண்டும்."

நீணிலப் பெருவைப்பும் நிகரிலா
வீணை வல்லவர் ஏனையர் மேவிய
ரேணும் மாலயன் ஊரம் திசையுமென்
ஆணை செல்ல அளித்தருள் செய்தியால்

தக்கன் தவஞ்செய் படலம் 11

தந்தையாகிய பிரம்மதேவரின் மேலாகவும், தந்தையாரின் தந்தையாகிய விஷ்ணு பகவான் மேலாகவும், தன்னுடைய ஆணை செல்லவேண்டும் என்று கேட்டதோடு தக்கன் விடவில்லை. "உங்களை வந்து வணங்குகின்ற உயிர்கள் எல்லாம் என்னையும் வணங்க வேண்டும். உயர்ந்த தேவர்களும் அவுணர்களும் மற்றுமுள்ளவர்களும் யான் இட்ட ஏவலைச் செய்ய வேண்டும். எனக்கு நல்ல ஆண் மக்களும், பெண்களும் நீண்ட ஆயுள் உடையவர்களாகப் பெருகவும் வேண்டும்." என்று தொடர்ந்து கேட்கிறான்.

இவற்றோடு கூடத் தக்கன் விடவில்லை. இன்னும் கேட்கிறான். "ஆதிசக்தியாகிச் சகல புவனங்களையும் பெற்றெடுத்த தங்களின் பாதித்திருவுருவமான பராசக்தியை யான் என்னுடைய மகளாகப் பெறுதல் வேண்டும். தாங்கள் மறையவராகக் காதல் கொண்டு அந்த என் மகளான பராசக்தியைக் கடிமணம் செய்தல் வேண்டும்." என்று தக்கன் பல வரங்களை வேண்டிப் பெற்றான். சூரனைப் போன்றே தக்கனும் இன்னும் எவ்வளவோ நல்ல வரங்களைக் கேட்டுப் பெற்றிருக்கலாம். சிவன் மீது மாறாத அன்பையும் பத்தியையும் கேட்டிருந்தால் அவனுக்கு அழிவே வந்திருக்காது. தக்கன் இவ்வரங்களைப் பெற்றதும், பெருவாழ்வு வாழ்ந்ததும், பின்னர் கர்வம் கொண்டு சிவனை நிந்தை செய்ததும், சிவனுக்கு முதன்மை கொடுக்காது யாகம் செய்ததும், வீரபத்திரக் கடவுளால் அழிக்கப்பட்டதும், பின்னர் பராசக்தியின் வேண்டுகோளின்படி சிவனருளால் ஆட்டுத்தலையுடன் மீளுயிர் பெற்றதும் அதன் பிறகு பிரம்ம தேவரின் உபதேசப்படி, சிவபெருமானை நோக்கித் தவம் செய்து சிவகணங்களுடன் கயிலையைச் சேர்ந்ததும் தக்கனின் பிற்கால வாழ்வின் நிகழ்வுகள். தக்கனையும் சைவர்கள் எவரும் பெரியவனாகக் கருதுவதில்லை.

## வீரவாகுதேவர் கேட்ட வரம்

அசுரப் படைகளிலே தலைசிறந்த வீரன் சூரனுடைய மூத்த மகனான பானுகோபன். மொத்தமாக நடைபெற்ற பத்து நாள் யுத்தத்திலே மூன்று நாள்களைத் தலைமை வகித்து நடாத்தியவன். அது

மாத்திரமன்றி மூன்றாம் நாள் யுத்தத்தில் அசுரர் பக்கத்துக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்தவன். உக்கிரமான யுத்தத்தின் பின் பாநுகோபனின் ஐந்தாம் நாட் போரிலே வீரவாகுதேவரினாற் கொல்லப்படுகிறான். பாசறை மீண்ட வீரவாகுதேவர் முருகப் பெருமானை வணங்குகிறார். முருகப்பெருமான் வீரவாகு தேவரைப் பார்த்து விரும்பும் வரத்தைக் கேட்கும்படி சொல்கிறார். வீரவாகு தேவர் வரம் கேட்கிறார். "அழகு பொருந்திய குபேரனது செல்ல வாழ்க்கையையோ, இந்திரனது அரச வாழ்வையோ, திருமால், பிரம்மா ஆகியோர் பெற்ற பெருவாழ்வையோ நான் பெரிதென்று ஒருபோதும் விரும்பவில்லை. தங்களின் திருவடி மீது இடையறாத அன்பையே யான் வேண்டுகின்றேன். இந்த நல்ல வரம் முத்தியைவிட அரியது. அதனைத் தங்களை நினைத்து வழிபடும் முனிவர்களும் கூடப் பெறுவதில்லை. அதனைச் சிறியோனாகிய யான் உய்ந்திடும் பொருட்டு எனக்கு அருள் செய்ய வேண்டும்."

கோல நீடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன்
மேலை இந்திரன் அரசினைக் கனவினும் வெ∴கேன்
மால யன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சால நின்பதத் தன்பையே வேண்டுவன் தமியேன்.

பாநுகோபன் வதைப் படலம் 154

அந்த நல்வரம் முத்தியின் அரியதொன் றதனைச்
சிந்தை செய்திடு தவத்தரும் பெறுகிலர் சிறியேன்
உய்ந்தி டும்வகை அருள்செய வேண்டுமென் றுரைப்ப
எந்தை கந்தவேள் உனக்கது புரிந்தனம் என்றான்.

பாநுகோபன் வதைப் படலம் 155

சிவபெருமானை நேரில் கண்டு வரம் பெற்ற இந்த மூவரில், சூரனையோ, தக்கனையோ சைவசமயிகள் பெரியவர்களாகக் கருதவில்லை. எவரும் அவர்களுடைய பெயரைக் கூடத் தம் பிள்ளைகளுக்குச் சூட்டுவதில்லை. அவர்களுடைய பெயரை உச்சரிப்பதும் இல்லை. இதற்கு மாறாக வீரவாகுவை வீரவாகுத்தேவரெனக் கொண்டாடுகிறார்கள். பலர் வீரவாகு எனப் பெயர் கொண்டுள்ளனர். பேற்றோர்கள் பிள்ளைகளுக்கு வீரவாகுவெனப் பெயர் வைத்து மகிழ்கிறார்கள். பெருமையடைகிறார்கள். வீரவாகு தேவர் என்றும் முருகப்பெருமானுடன் இருக்கும் பெருவாழ்வு பெற்றார். இதுவே இவர்கள் கேட்டுப் பெற்ற வரங்களின் பயன்.

நாம் கோயிலுக்கு வருகிறோம். எம்முடைய வாழ்க்கைப் பிரசினைகளுக்குத் தீர்வு வேண்டி வரம் கேட்குமுன்னர். முருகப்பெருமான் மீது வற்றாத அன்பையும், நல்லொழுக்கத்தையும், எல்லாவுயிர்களிலும் அன்பையும் வேண்டி வழிபடலாந்தானே. இவ்வாறு வேண்டி வழிபடும் போது வீரவாகு தேவருக்கு நிகழ்ந்தது போல் உலகாயதத் தேவைகள் பொருட்டின்றிப் போய்விடும். முருகப்பெருமானின் பேரருளுக்கு நாம் பாத்திரராவோம். இவ்வாறாக என்ன வரம் வேண்டிப் பெறல் வேண்டும் என்ற கேள்விக்கு இறைவன் மீது வற்றாத அன்பையே முதற்கண் வேண்டுதல் வேண்டும் என்ற சிறப்பான பதிலைக் கந்தபுராணம் சொல்லா நிற்கின்றது.

சிந்தனைகள் வளரும்..

வேண்டத் தக்க தறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய் யானும் அதுவே வேண்டி னல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே

# சபரிமலை ஐயப்பன்

**பயணக் கட்டுரை- சாவகச்சேரியூர் டாக்டர் க. கதிர்காமநாதன்**

சபரிமலை ஐயப்பனைத் தரிசிக்கச் செல்லும் பயணம் ஒரு வீரச்செயலாகும். இக்கோயில் மலைசார்ந்த, யானைகள் வசிக்கும் வனக் கோயிலாகும். எல்லா வயதுப் பெண்களும் அநுமதிக்கப்படுவதில்லை. 10வயதிற்குட்பட்ட பெண்களும் 50 வயதிற்கு மேற்பட்ட பெண்களுமே அநுமதிக்கப்படுகிறார்ள். பத்தர்கள் 4 நாள்கள் விரதம் இருக்க வேண்டும். இவ்விரதம் இருக்காமல் ஐயப்பனின் 18 படிகளை ஏறமுடியாது. சிவனுக்குக் காசி, கங்கை போன்று ஐயப்பனுக்கு சபரிமலையும் பம்பா நதியுமாகும். இக்கோயிலில் ஐயப்பன் யோக மூர்த்தியாக அருள் பாலிக்கின்றார்.

ஐயன் + அப்பன் என்கின்ற பதத்தில் ஐயன் என்றால் கௌரவ, தூய, மரியாதைக்குரிய எனப் பொருள்படும். அப்பன் என்றால் தந்தை, பெரியவர் என்றும் சபரி என்றால் இராம பக்தையான சபரி வாழ்ந்த இடம் என்றும் கருத்து. பம்பா நதி என்றால் பாவத்தை நாசம் செய்யும் என்ற கருத்து நிலவுகிறது. மலையின் அடிவாரத்தில் ஓடும் இந்நதியில் நீராடிய பின்புதான் பத்தர்கள் சபரி மலை ஏறுவார்கள். “பம்பா வாசா மணிகண்டா பந்தள தீபா மணிகண்டா” எனப் பாடியபடி மக்கள் தீபங்களை ஏற்றி மிதக்க விடுவர்.

18 படிகள் - ஒரு மண்டல விரதமிருந்து, இருமுடி கட்டுடன் முறைப்படி ஏறும் பத்தர்கள் இறுதியாக ஐயப்பனை அடைய உயர்ந்த பீடமாக உள்ள இப்படிகளை ஏற வேண்டும். இவற்றுள் 18ஆம் படியே முக்கியமானது.

**ஐயப்பனைத் தரிசிக்க கடைப்பிடிக்க வேண்டியவை:**

41 நாள்கள் விரதம், குருநாதராக ஒருவரை ஏற்று அவர் மூலமாக மாலை போடல், காலை மாலை குளிர் நீரில் குளித்தல், மது, மாது புகை பிடித்தல், புலால் உண்ணல் தவிர்த்தல், மரணவீடு, பிரசவ பிறந்த வீடுகளுக்குப் போகாமல் இருத்தல், சவரம் செய்யாமல் இருத்தல், கறுப்பு அல்லது காவி உடை அணிதல் என்பன.

இலண்டனில் வாழ்ந்த நாம் இவற்றைக் கடைப்பிடிப்பது சிரமாக இருந்தது. விரதமிருக்காமல் சென்றால் 18 படிகளை ஏற முடியாது என அறிந்தோம். மற்றையக் கோயில்கள் போல் தினமும் இங்கு தரிசனம் இல்லை. நவம்பர் மாத மத்தியிலிருந்து ஜனவரி மாத நடுப்பகுதி வரையும், மலையாள மாதங்களின் முதல் 5 நாள்களுக்கும் மட்டுமே இக் கோயில் திறந்திருக்கும்.

14.03.2006 அன்று அலபே என்னும் இடத்திலுள்ள விடுதியில் ஐயப்பனை நினைந்து நீராடி, காவியும் உருத்திராட்சமும் அணிந்து மனைவியுடன் காரில் சென்றேன். அங்கு கறுப்பு உடை அணிந்து இருமுடி தரித்த ஐயப்ப பத்தர்களைச் சந்தித்தோம். கறுப்பு உடை ஐயப்பனின் முன் யாவரும் சமம் என்கின்ற தத்துவத்தைக் காட்டுகின்றது.

அங்கு உண்ட மலையாள உணவு யாழ்ப்பாணத்தை நினைவிற்குக் கொண்டு வந்தது; பசியையும் பயணக் களையையும் தீர்த்தது. கார் மலைப்பிரதேசத்தில் வளைவான பாதைகளிலே சென்றபோது அழகான இயற்கைக் காட்சிகளைக் கண்டோம். ஒரு கடையில் மலையில் விளைந்த மிளகு, வாசனைத் திரவியங்கள், வாழைப் பழம் என்பன வாங்கினோம். ஆட்டோ ரிக்ஷா, வேன், பஸ் வண்டிகளில் ஐயப்பன் உருவப் படத்தைத் தாங்கிய பத்தர்கள் செல்வதையும் கண்டோம். மாலை 4 மணியளவில் சபரி மலை அடிவாரத்தை அடைந்தோம். ஆண் யாத்திரிகர்களே அதிகமாகக் காணப்பட்டனர்.

பம்பா நதியில் முழங்கால் அளவே நீர் ஓடிக் கொண்டிருந்தது. பத்தர்கள் குளித்துக் கொண்டிருந்தனர். நாம் 7 ரூபாவிற்கு 3 தேங்காய்களை வாங்கிக் கொண்டு மலை ஏற ஆயத்தமானோம். முதலில் அடிவாரத்திலுள்ள பிள்ளையார் கோயிலுக்குச் சென்றோம். அங்கு குருசாமி தலைமையில் இருமுடி தாங்கி கறுப்பு உடை அணிந்த ஒரு பெரிய கூட்டத்தையே கண்டோம். அரையில் கறுப்பு ஆடையும் கழுத்தில் உருத்திராட்ச, துளசி மாலைகளும் அணிந்து தலைப் பாகையின் மேல் இருமுடிகள் தாங்கி தோள்களில் பைகளுடன் பக்தியுடன் “சரணம், சரணம் ஐயப்பா சுவாமி சரணம்” எனக் கோஷமிட்டு தேங்காய்களை உடைத்த காட்சி மெய் சிலிர்க்க வைத்தது.

இருமுடி- முன்முடியில் தேங்காயின் ஒரு கண் வழியே உள்ளே இருக்கும் நீரை எடுத்து விட்டு நெய்யை அதனுள் விட்டு மூடி வைத்திருப்பார்கள். இது விஷ்ணுவும் சிவனும் ஒன்று என்கின்ற தத்துவத்தைக் குறிக்கின்றது. இம் முடியில் அர்ச்சனைப் பொருள்களும் இருக்கும். பின் முடியில் வழிப்பயணத்திற்குத் தேவையான உணவு இருக்கும். ஐயப்பனைத் தரிசித்தால் அகங்காரம் ஆணவம் என்னும் இரண்டும் நீங்கும் என்பதை இருமுடித் தத்துவம் காட்டுகின்றது,

நாமும் தேங்காயை பிள்ளையார் கோயிலில் உடைத்தோம். உடைத்த தேங்காய்கள் அங்கு மலையளவு குவிந்திருந்தன. அருகில் உள்ள இராம, இலட்சுமண, அனுமார் கோயில்களைக் கும்பிட்டு மலை ஏறத் தொடங்கினோம்.

மலை ஏறல்- 5 மைல் தூரம் ஏறி ஐயப்பனை அடைய வேண்டும். திருப்பதி போல் உச்சி வரை படிகள் இல்லை. நின்று

நின்று குறுக்கும் நெடுக்குமாக நடந்துதான் மலை ஏற வேண்டும். மலை ஏற ஆரம்பித்து 15 நிமிடங்களில் கனத்த மழை பெய்ய ஆரம்பித்தது. மழையில் தெப்பமாக நனைந்தோம். நதியில் நீராடமல் வந்த நாம் மழையில் நனைந்தபடியே மலை ஏறினோம். இதுவும் ஐயப்பனின் அருளோ என்று நினைத்தோம்.

வழி நெடுக மின்சார விளக்குகள் இருந்தன. மாதப் பிறப்புக்கு முதல் நாள் என்பதால் கூட்டம் அவ்வளவாக இருக்கவில்லை. சிலரை நாற்காலிகளில் வைத்துச் சுமந்து சென்றார்கள். ஒருவரைப் படுக்கையில் பிராணவாயு உருளையுடன் (oxygen cylinder) தூக்கிக் கொண்டு கோஷமிட்டபடி சென்றார்கள். தரும மேடு, அப்பச்சி மேடு இவற்றைக் கடந்து சபரி பீடத்தையடைந்தோம். இங்கு கடைகள் உள்ளன. சிற்றுண்டி, தேநீர், குளிர்பாணம், அர்ச்சனைப் பொருள்கள் இங்கு கிடைக்கும். இவ்விடத்தில் இளைப்பாறியும் செல்லலாம். மாலை 7 மணியளவில் கோயிலை அடைந்தோம்.

கோயில் சிறியது என்றாலும் கேரள முறைப்படி அழகாகக் கட்டப்பட்டுள்ளது. நான்கு தங்கக் கலசங்கள் முடியில் இருந்தன. உயர்ந்த கொடி மரம் முதலில் தென்படும். பின்பு நெருங்கியவுடன் செங்குத்தாக இருவர் மட்டும் ஏறக் கூடிய 18 படிகள் தென்பட்டன. முதலாம் படியின் அருகே பத்தர்கள் கர்ப்பூரம் எற்றி தேங்காய் உடைத்து ஐயப்ப கோஷமிட்ட படி ஏறினார்கள்.

ஐயப்பன் யார்? - மகிஷிமுனி என்னும் அரக்கியை அழிக்கப் புறப்பட்ட விஷ்ணுவிற்கும் சிவனுக்கும் மார்கழி மாதம் சனிக்கிழமை, பஞ்சமித் திதியில், உத்தர நட்சத்திரத்தில் தோன்றியவர். விஷ்ணு சிவ அம்சங்களைக் கொண்ட காரணத்தால் ஹரிகர புத்திரன் என்ற பெயரையும் பெற்றார்.

ஐயப்பன் சந்நிதி - சாதி மத பேதமின்றி எல்லோரும் ஒரே வரிசையில் நின்று அநுமதிக் கட்டணமின்றி தரிசிக்கலாம். குழந்தை வடிவில் அமர்ந்த நிலையில் யோக பட்டை என யோகிகள் அணியும் உடையோடும் கை, கால், கழுத்தில் ஆபரணங்களுடனும் கம்பீரமாகக் கிழக்கு நோக்கிக் காட்சியளிக்கின்றார். விஷ்ணு சக்தியைக் காட்டும் வண்ணம் நெற்றியில் நாமமும் வலது கையில் உபதேச முத்திரையும், இடது கையை முழங்காலில் சேர்த்தபடி காட்சி கொடுத்து அருள்பாலிக்கின்றார்.

நாம் வரிசையிலே சென்று தேங்காய் உடைத்து நன்கு தரிசித்தோம். 18 படிகள் ஏறி அபிஷேகம் செய்யும் போது எமது தேங்காயினுள் நெய் "உறைந்து" இருந்தால் ஐயப்பனுக்கு எமது பிரயாணம் சம்மதமாகக் கருதப்படும் என்று ஒரு "கன்னி" சுவாமி தெரிவித்தார். கன்னி என்பது முதல் முறை சபரி மலைக்கு வருபவர்களைக் குறிக்கும். இங்கு ஒருவரை ஒருவர் சாமி என்றே அழைப்பர்.

கோயிலின் மேற்கு பிரகாரத்திலுள்ள கன்னி மூலையில் பிள்ளையார், நாகர் ஆகியோரின் சந்நிதிகளைத் தரிசித்த பின் கோயிலைச் சுற்றி வலம் வந்தோம். பின் சற்றுக் கீழே இறங்கி உயரமான இடத்தில் இருக்கும் "மாளிகை புறுத்து அம்மாவை" தரிசனம் செய்தோம். இங்கு தேங்காயை உடைப்பதில்லை. தேங்காயைக் கோயிலைச் சுற்றி உருட்ட வேண்டும். இது புதிய அநுபவமாக இருந்தது. குனிந்து உருட்டும் போது உற்சாகமாக இருந்தது.

அடுத்து வடகிழக்கில் உள்ள "வாவர்" சந்நிதிக்குப் போனோம். அப்போது இரவு 9 மணி இருக்கும். முஸ்லிம் பெரியார் ஒருவர் பிரசாதம் அளித்தார். வாவர் ஐயப்பனுடைய இஸ்லாமியத் தோழர் ஆவார். முதலில் பகைவராயும் பின் நண்பராகவும் மாறியதாகச் சொல்வர். இது இங்குள்ள இந்து முஸ்லிம் ஒற்றுமையை எடுத்துக் காட்டுகிறது.

பதினெட்டாம் படிக்கு இரு மருங்கிலும் கொச்சுக்கடுக்க சுவாமியும், கருப்பன் சுவாமியும் துவாரபாலகரும் இருக்கின்றனர். கிழக்கே உள்ள ஓம குண்டத்தில் தீ சுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்தது. அபிஷேகத்திலே பயன்படுத்திய தேங்காய்களை இந்த ஓம குண்டத்தில் போடுவதைக் கண்டேன்.

மலையிலிருந்து இறங்குவது சுலபமல்ல. கவனமாக இறங்கினோம். செங்குத்தான பல பகுதிகள் உள்ளன. நள்ளிரவு 12 மணியளவில் மலையடிவாரத்தை வந்தடைந்தோம்.

ஐயப்பனுக்கு கார்த்திகை முதற் திகதி முதல் மார்கழி பதினொராம் திகதி வரை மண்டல பூசை நடைபெறும். தைப்பொங்கலன்று நடைபெறும் மகர பூசையும் சிறப்பானது.

கேரளத்திலுள்ள கோட்டயத்திலிருந்து 120 கி மீட்டர் காட்டுப் பிரதேச மத்தியிலும், மேற்குக் கடற்கரையிலிருந்து 80 கி.மீட்டர் தூரத்திலும் சபரி மலை இருக்கின்றது.

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா. ஓம் கன்னி மூல கணபதியே சரணம் ஐயப்பா.

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ நடராஜர் கும்பாபிஷேக தின ஆசிச்செய்தி

**வைத்திய கலாநிதி திருமதி இந்திரா சிவயோகம் FRCS (Eng) FRC.Ophth**

திருவருளும் குருவருளும் கைகூட, சைவமுன்னேற்றச் சங்கத்தின் தோன்றாத் துணையான சமயகுரவர் நால்வரின் அருள் மேலோங்க சங்கம் ஆற்றிவரும் ஆன்மிக சேவையின் சிகரமாக இந்த விழா இன்று நிகழ்கிறது. பிரித்தானிய ஐக்கிய அரசில் சைவ ஆகம விதிப்படி யாக, ஹோம பூசைக் கிரியைகளுடன் பொன்மயமான சந்நிதி சங்கத்தின் வழிபாட்டு மண்டபத்தில் அமைவது என் துணைவரையும் என்னையும் விவரிக்க முடியாத பூரிப்பு அடையச்செய்துள்ளது; திருமூல நாயனாரின் திருமந்திர வாக்கை நினைவுறுத்துகிறது.

அளித்தான் உலகெங்கும் தானான உண்மை
அளித்தான் அமரர் அறியா உலகம்
அளித்தான் திருமன்றுள் ஆடும் திருத்தாள்
அளித்தான் பேரின்பத் தருள்வெளி தானே

சைவமுன்னேற்றச் சங்கம் நம் சமுதாயத்தின் ஆன்மிக சம்பத்தை பரிபூரணமாக நிலைநாட்டும் குறிக்கோளுடன் செயற்படுகின்றது. வரம்பிலாக் கருணை மா கடலானதும் எங்கும் வியாபித்துள்ளதும் சிவசத்தி ஐக்கியத்தைப் பரிமளிப்பதுமான ஆனந்த நடராஜத் திருவுருவை நாம் வணங்கிப் பிறவிப்பிணியை நீக்குவதற்கு மார்க்கம் ஏற்படுத்தியுள்ளது.

ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்
நீங்காத எழுத்தே நிறைசுடராம் - ஆங்காரம்
அற்றார் அறிவர்அளி அம்பலத்தார் ஆடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின்

எமது சைவத்தின் ஒப்பற்ற தத்துவமாகிய ஓம் என்னும் ஒலி திருவாசியாகவும் ஐந்தெழுத்தாகிய நமசிவய நடமிடும் சிவசத்தி ஐக்கிய ஸ்வரூபமாகவும் சங்கமித்துக் காட்சிதரும் ஆனந்த நடராஜத் திருவுருவம் நம் பிறவிப்பிணியை நீக்கும்.

"சொல்லும் பொருளுமென நடமாடும் துணைவருடன் புல்லும் பரிமளப்பூங் கொடியாக" பரிணமித்து அண்டசராசரங்களின் அகமும் புறமும் கலந்து ஆடலரசன் அருள்நடம் புரிகிறார். ஆன்ம அணுவின் உட்சிதாகாசத்திலும் பிரபஞ்சத்திலுள்ள இயங்கியல், நிலையியல் உயிர்ப் பொருள்களிலும் அம்பலத்தரசனின் ஆனந்த நடனம் அதியற்புதமாகத் தொடர்ந்துகோண்டே இருக்கிறது.

விநோத வகையில் நம்பால் ஆனந்த நடராஜர் இத் தேசத்திலே எழுந்தருளி இருப்பதைச் சிந்திக்கும் வேளை அதிசயமோ அற்புதமோ என வினவி, ஊன்றிய பாதம் நம் ஆணவ மலத்தைக் களைய, தூக்கிய திருவடி நமக்கு அநுக்கிரகிக்க அக் குஞ்சிதபதத்தை இறைஞ்சுகிறோம்

கும்பாபிஷேக ஆகமாதி கைங்கரியங்களில் பங்குபற்றும் சிவாசாரியர்களையும் சைவ முன்னேற்றச் சங்கத்தினரையும் பிரதானமாக, திரு இராமநாதன், திரு ஆனந்ததியாகர் உள்ளிட்ட ஆட்சிக்குழுவினர், ஏனைய அங்கத்தவர்களையும், உபயகாரர்களையும் அன்புடன் பாராட்டி, பல ஆண்டுகளாகச் சங்கத்தோடு தொடர்புள்ள தம்பதி எனும் கருத்துடன் மேலும் பலமுறை சங்கத்தின் சேவை பரிமளிக்க எல்லாம் வல்ல சிவகாமசுந்தரி சமேத ஆனந்த நடராஜப்பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் நமசிவாய.

# எழுத்துப் பிழை அற....

இந்த நாட்டில் கோயில்களிலே தேவாரம் புராணங்கள் பாடுவது அதிகரித்து வருகிறது. இது பாராட்டப்படவேண்டிய விடயம். சிறுவர்கள், பெரியவர்கள், சிவாசாரியர்கள் என்று பலரும் பாடுகிறார்கள். அதற்கு மேலே, சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் கடந்த சில வருடங்களாக ஆண்டுதோறும் நடத்தும் சைவ மகாநாட்டுக்கு முன் பண்ணிசைப்போட்டி என்று ஏற்பாடு செய்து சிறுவர்களைத் தேவார திருவாசகம் பாட ஊக்குவிக்கிறது. இந்த வளர்ச்சிகள், முயற்சிகள் அனைத்தும் வரவேற்கவேண்டியவை.

ஆனால், தேவார திருவாசகங்களைப் பாடுவதற்குப் பல நெறிமுறைகள் இருக்கின்றன. பண்முறை, தூய்மை என்று பல விதிகளை ஆன்றோர் அமைத்துள்ளனர். அதுபற்றி இங்கே குறிப்பிடவில்லை. திருமுறைகளைப் பாடும்போது பிழையின்றிப் பாடுவது அவசியம். அதையே இங்கே குறிப்பிட விரும்புகிறோம். இது குறைகூறும் நோக்கம் அல்ல. பிழைகளைத் திருத்தி மேலும் இந்த நற்பணி வளரவேண்டும் என்ற நல்ல நோக்கிலேயே இந்தப் பகுதி கலசத்திலே வருகின்றது. அருணகிரிநாதர் காலத்திலும் பிழையாக அருட்பாடல்கள் பாடுவோர் இருந்திருக்கிறார்கள் போலும். அதனாலேதான் அருணகிரிநாதர்,

"அழித்துப் பிறக்கவொட்டா அயில்வேலன் கவியை அன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர்" என்று பாடியிருக்கவேண்டும். அந்தப் பாடலின் இறுதியில்,
"................பொங்குவெங் கூற்றம் விடுங்கயிற்றால்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன்றோ கவி கற்கின்றதே?" என்று அங்கலாய்க்கிறார் அருணகிரியார். இறக்கும்போதா சரியாகப் படிக்கப்போகிறோம்?

கோயில்களிலே பாடும்போது காதிலே விழுந்த சில பிழையான வரிகளே இந்தப் பகுதியை ஆரம்பிக்க வேண்டும் என்ற சிந்தனையைத் தூண்டின. அதனால் உந்தப்பட்டு ஆரம்பித்த இப்பகுதிக்கு வாசகர்களாகிய உங்கள் பங்களிப்பு மிக முக்கியம்.

இதுவரை வந்த தேவாரப் பதிப்புக்களில் யாழ்ப்பாணம் சாமிநாத பண்டிதர் அவர்களின் பதிப்பே முதன்மையானது. தற்காலத்தில் தருமையாதீனம் வெளியிட்ட பதிப்பு சிறந்தது. எம்மால் முடிந்தவரை சரியான திருப்பாடல்களை இங்கே பிரசுரிப்போம். பார்த்துப் படித்துப் பயனடையுங்கள்.

இந்த இதழிலே,
"பிடியதன் உருகுமை கொள" என்றும் "வாடிகொடு தானாதாடி" என்றும் "வாடிவினர் பாயில்வாலி" என்றும் பாடுவதைக் கேட்டிருக்கிறோம். சரியான தேவாரம் இதோ.

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே

திருஞானசம்பந்தர் பாடிய இத்தேவாரம் முதலாந் திருமுறையில் வருகிறது. இதன் பண் வியாழக்குறிஞ்சி. திருவலிவலம் என்ற இடத்தில் உள்ள கோயிலிலே பாடப்பட்டது. இத்திருத்தலம் சோழநாட்டில் உள்ளது. இறைவன் பெயர் மனத்துணைநாதர். இறைவி பெயர் மாழையங்கண்ணி. தன்னை வழிபடுவோரின் துன்பங்களை நீக்க எண்ணிய சிவபெருமான் கணபதியை தோற்றுவிக்கத் திருவுளம் கொண்டார். கணபதி என்ற கடவுளை சிவபெருமான் எப்படித் தோற்றுவித்தார் என சம்பந்தர் கூறியுள்ள விவரம் இது. கணபதியின் தோற்றம் பற்றி வேறு பலவிதமான கதைகளும் உண்டு. இப்புதிய பகுதிபற்றி வாசகர்களின் கருத்துக்களை எதிர்பார்க்கிறோம்.

# தமிழ் மூவர்கள்

- ரிஷி சர்மா

சங்கீத மும்மூர்த்திகள் எனப்படும் தியாகப்பிரும்மம். முத்துஸ்வாமி தீட்சிதர் . சியாமா சாஸ்திரிகள் காலத்திற்கு முன்பே கர்நாடக இசையைப் போற்றி . தமிழில் கீர்த்தனங்கள் இயற்றியவர்கள் முத்துத்தாண்டவர். அருணாசல கவிராயர் . மாரிமுத்தாப்பிள்ளை ஆகியவர்கள். இவர்களைத் தமிழ் மூவர்கள் என்று அழைப்பர்.

## முத்துத் தாண்டவர் ( 1560 1640 )

சீர்காழியில் இசை வேளாளர் குடும்பத்தில் பிறந்தார். தில்லைக் கூத்தனின் திருப்பெயரான தாண்டவன் என்று பெயர் சூட்டப்பட்டார். சிறுவயதிலேயே நோயின் காரணமாக உடல்நலமும் தோற்றப்பொலிவும் குன்றியது. அவரால் தனது குடும்பத் தொழிலைத் தொடர இயலவில்லை. யாவராலும் ஒதுக்கப்பட்டார். அண்டை வீட்டுக்காரரான சிவபாக்கியம் என்னும் மாது அவரிடம் அன்பு கொண்டு சிவன் மேல் பக்திப் பாடல்களை பாடுவாள். அவரும் சிதம்பரம் நடராசர் மேல் பாடல்கள் இயற்றிக் கோயிலில் பாடுவார். கோயில் பிரசாதத்தை உண்டு வாழ்ந்தார்.

ஒருநாள் கோயிலுள் வாகன மண்டபத்தில் மயங்கி விழுந்து விட்டார். கோயில் சிப்பந்திகள் அவரைப் பாராது விளக்குகளை அணைத்து. கோயிலைப் பூட்டிவிட்டுச் சென்று விட்டனர். இருட்டில் எழுந்த தாண்டவர் இறைவனை அழைத்தார். சிறிது நேரத்தில் குருக்களின் சிறிய மகள் உணவுடன் வந்தாள். சிதம்பரம் சென்று. அங்கு காலையில் கேட்கும் முதல் சொற்களை வைத்து தினமும் கூத்தன் மேல் பாடல் இயற்றச் சொன்னாள். மறுநாள் காலை கோயில் கதவைத் திறந்த சிப்பந்திகள் நோய் நீங்கி. பொலிவுடன் விளங்கும் தாண்டவனைக் கண்டனர். அவரை முத்துத்தாண்டவன் எனப் புகழ்ந்தனர். வந்த சிறுமி அக்கோயிலில் வீற்றிருக்கும் லோகநாயகியே என்று அவர் உணர்ந்தார்.

முத்துத்தாண்டவர் சிதம்பரம் சென்று முதலில் பூலோக கயிலாயகிரி சிதம்பரம் என்ற பாடலைத் தொடர்ந்து பல பாடல்களைப் பாடினார். 1640 ஆம் ஆண்டு பூச நட்சத்திரத்தில் கூத்தன் திருவடி சேர்ந்தார்.

கர்நாடக இசையில் பல்லவி. அநுபல்லவி. சரணம் முறையை அறிமுகப்படுத்தியவர் இவரே ஆகும். அறுபது கீர்த்தனங்களும் இருபத்தைந்து பதங்களும் இதுவரை கிடைத்துள்ளன. அருமருந்தொன்று தனி மருந்து (மோகனம்). பேசாதே நெஞ்சமே (தோடி). காணாமல் வீணிலே (தந்யாசி). தெருவில் வரானோ (கமாஸ்). உனை நம்பினேன் ஐயா (கீர்வாணி). ஈசனே கோடி சூர்ய (நளினகாந்தி). தரிசித்தளவில் (லதாங்கி). சேவிக்க வேண்டும் (ஆந்தோளிகா). இன்னும் ஒரு தரம் (சிம்மேந்திரமத்யமம்). அம்பர சிதம்பரம் (சுரட்டி) ஆகியவை சில.

## அருணாசலக் கவிராயர் (1711 1788)

தில்லையாடியில் பிறந்தார். தமிழ். தெலுங்கு. வடமொழி ஆகியவற்றில் சிறந்து விளங்கினார். இவரின் இராம நாடகக் கீர்த்தனை என்னும் இசைநாடகம் இன்றும் பிரசித்தமாக உள்ளது. சீர்காழி கோவை. சீர்காழித் தலபுராணம். அநுமார் பிள்ளைத் தமிழ். அயொமுகி நாடகம் இவரால் இயற்றப்பட்டவை.

ஏன் பள்ளி கொண்டீர் ஐயா (மோகனம்) யாரோ இவர் யாரோ (பைரவி). கண்டேன் சீதையை (வசந்தா). ராமனைக் கண்ணார (மோகனம்) ஸ்ரீ ராமசந்திரனுக்கு ஆகிய கீர்த்தனங்கள் பெயர் பெற்றவை.

## மாரிமுத்தாபிள்ளை ( 1717 1787 )

இவர் தில்லைவிடங்கன் என்ற ஊரில் பிறந்தார். புலியூர் வெண்பா இயற்றினார். இருபத்தைந்து கீர்த்தனங்கள் கிடைத்துள்ளன. இவரது பாடல்களிலே பல சரணங்கள் இருக்கும்.

இவருடைய ஒருகால் சிவசிதம்பரம் (ஆரபி). காலைத்தூக்கி (யதுகுலகாம்போதி) எதுக்கு இத்தனை மோடித்தான் உனக்கு எந்தன் மேலய்யா (சுரட்டி) ஆகியவை பிரசித்தமானவை.

# கண்ணனும் தாத்தாவும்

-முத்து

அன்று காலை பத்துமணி, வெள்ளிக்கிழமையாதலால் தாத்தா காலையில் முருகன் கோயிலுக்குப் போய் முருகனை மனதாரத் தரிசித்துவிட்டு வந்து, பாட்டி கொடுத்த தேநீரை ரசித்துக் குடித்துக்கொண்டு சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். கோயிலுக்குப் போய்விட்டு வந்ததனால் எற்பட்ட மனநிறைவு அவரது முகத்தில் தெரிகிறது. கண்ணன் அப்பொழுதுதான் தன் காலைக்கடன்களை முடித்துக் காலை உணவை அருந்திவிட்டு வரவேற்பறைக்குள் நுழைகிறான்.

**தாத்தா** : கண்ணா! ஏனடா இன்று பள்ளிக்குப் போகவில்லை?

**கண்ணன்** : இன்று பெரியவெள்ளி (Good Friday) வருடந்தோறும் வரும் ஈஸ்டர் விடுமுறை மறந்துவிட்டீர்களா தாத்தா? கிறிஸ்துவப் பண்டிகை.

**தாத்தா** : மறக்கவில்லையடா கண்ணா! வழக்கமாகச் சித்திரை மாதத்திலேதான் வரும். போன வருடம் எங்கள் புது வருடமும் பெரிய வெள்ளியும் ஒரே நாளிலே வந்தன.

**கண்ணன்** : ஆமாம் தாத்தா! எங்களுக்கும் இன்று பள்ளி விடுமுறை. அதனால் நாங்கள் எல்லோரும் கோயிலுக்குப் போயிருந்தோம்.

**தாத்தா** : நீ வீட்டிலிருப்பது தெரிந்திருந்தால் உன்னையும் கூட்டிக் கொண்டு போயிருப்பேனே.

**கண்ணன்** : நெற்றி நிறையத் திருநீறும் சந்தன குங்குமப் பொட்டுடன் உங்களைப் பார்த்தால் கிருபானந்த வாரியார் போல இருக்கிறீர்களே! அடியார்க்கும் அடியேன் என்று உங்களைக் கும்பிட்டாலே போதும் தாத்தா (வேடிக்கையாகச் சொல்லியபடி தாத்தாவின் காலடியில் விழப்போகிறான்.)

**தாத்தா** : (அவனைக் கையால் அணைத்து) என்னடா கண்ணா பெயருக்கேற்ப பெருங்குறும்புக்காரனாக இருக்கிறாயே!

**கண்ணன்** : உங்களுடன் மட்டுந்தானே இந்தக் குறும்புச் சேட்டைகள் செய்யலாம். அம்மாவும் அப்பாவுந்தான் அலுவலக வேலையென்றும் வீட்டு வேலை என்றும் ஓடித் திரிகிறார்களே!

**தாத்தா** : அவர்கள் அப்படி ஓடி ஓடி உழைப்பதாலேதான் நானும் நீயும் பாட்டியும் வீட்டிலே சொகுசாக இருக்கிறோம். இந்த ஊரில் சீவிக்க நிறையக் காசு வேண்டும் கண்ணா!

**கண்ணன்** : அதென்ன தாத்தா அப்படிப் பெரிய செலவு இங்கு?

**தாத்தா** : வீட்டுக் கடன், வீட்டு வரி, கார் வைத்திருப்பதற்கு வரி இப்படிப் பல உள்ளன. நீ பெரியவ-னாகி வந்து அறிந்தால் போதும்.

**கண்ணன்** : அப்போ நான் பெரியவனாகி உழைக்கத் தொடங்க அப்பா கொஞ்சம் ஓய்வெடுக்கலாம். என்ன தாத்தா?

**தாத்தா** : நீ பெரியவனாகிப் பலசாலியாக வரும் போது உனது அப்பாவின் உடல் பலம் குறைந்து தளர்ந்து விடும். அப்போது பிள்ளை அப்பாவைக் கவனித்துக் கொள்வது அவசியமே. இப்போது உனது அப்பா என்னை எப்படிக் கவனிக்கிறாரோ அப்படி.

**கண்ணன் :** சரி தாத்தா நீங்கள் உதாரணம் காட்டி விளக்கமாகச் சொல்லிவிட்டீர்களே நான் அப்படியே செய்வேன்.

**தாத்தா :** கண்ணா! ஒரு மகன் தந்தைக்கு என்ன உதவி செய்ய வேண்டும் என்பதைப்பற்றி ஒரு திருக்குறள் நினைவுக்கு வருகிறது சொல்கிறேன் கேள்.

**கண்ணன் :** சரி தாத்தா செல்லுங்கள். நான் அதனைக் கடைப்பிடிக்க முயற்சிக்கிறேன்

**தாத்தா :** மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல்

**கண்ணன் :** கொஞ்சம் புரிகிறது. ஆனாலும் நீங்கள் இன்னும் விளக்கமாகச் சொல்லுங்கோ தாத்தா!

**தாத்தா :** இந்தப் பிள்ளையைப் பெறுவதற்கு இவனுடைய தந்தை முற்பிறப்பில் என்ன தவம் செய்தானோ? என்று ஒரு பிள்ளையைப் பார்த்து எல்லோரும் பாராட்ட வேண்டும். அதைக் கேட்கும் போது அந்தத் தகப்பன் எவ்வளவு மகிழ்ச்சி அடைவான் என்று கற்பனை பண்ணிப்பார். அதுதான் ஒரு மகன் தனது தந்தைக்கு செய்ய வேண்டிய பெரிய உதவி.

**கண்ணன் :** ஒரு பிள்ளை எப்படியிருந்தால் மற்றவர்கள் பாராட்டுவார்கள் அதையும் சொல்லுங்கோ தாத்தா.

**தாத்தா :** பள்ளியிலே படிக்கும் காலத்தை வீணாக்காது நன்றாகப் படிக்க வேண்டும். திருக்குறள் போன்ற வாழ்க்கைக்கு வழிகாட்டும் நல்ல புத்தகங்களைப் படிக்க வேண்டும். பெரியவர்களோ நண்பர்களோ சொல்லும் நல்ல விஷயங்களைக் கேட்டு மனதிலே பதித்துக் கொள்ள வேண்டும். இதனால் ஒரு பிள்ளை கல்வியறிவுள்ளவனாகவும் நல்ல பண்புள்ளவனாகவும் வளரலாம். இப்படியான பிள்ளை தம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கு நல்லதையே செய்வான்.

**கண்ணன் :** அவனை எல்லோரும் பாராட்டுவார்கள். அதைப் பார்த்து அவனது தந்தை மட்டுமல்ல தாய், தாத்தா பாட்டி எல்லோருமே மகிழ்ச்சியடைவார்கள்.

**தாத்தா :** மகிழ்ச்சி மட்டுமா? மிகவும் பெருமைப்பட்டுக்கொள்வார்கள் கண்ணா. இந்த இசை மேதைகள், இலக்கியப் படைப்பாளிகள், சமயத்தை வளர்க்கப் பாடுபடுவோர், விஞ்ஞானிகள் இவர்களெல்லாம் யாரோ பெற்று வளர்த்த பிள்ளைகள்தானே. இவர்களை உலகமே பாராட்டுகிறது அல்லவா?

**கண்ணன் :** ஆமாம் தாத்தா, மிகவும் உண்மை. என்னைப் பிரமிக்க வைக்கிறது உங்கள் தெளிவான விளக்கம். இந்த இசைக் கலைஞர்கள் ஒரே நேரத்தில் எத்தனை ஆயிரம் பேரை மகிழ்விகிறார்கள்

**தாத்தா :** ஆமடா கண்ணா! இவர்களெல்லாம் தங்களுக்காக வாழாமல் மக்கள் பயன்பெற வாழ்கிறார்கள். சரியடா கண்ணா! திருஞானசம்பந்தரின் திருநீற்றுப் பதிகத்துக்கு வருவோம்.

**கண்ணன் :** சரி தாத்தா! தொடங்கியதைப் பாதியில் விடக் கூடாதல்லவா? **'மந்திரமாவதுநீறு'** என்னும் தோவாரத்தை எப்போது ஏன் பாடினார்? சொல்லுங்கோ.

**தாத்தா :** திருஞானசம்பந்தர் திருவாலவாய் என்னும் கோயிலிலுள்ள சிவனைத் தரிசிக்கப் போயிருந்தார். அப்போது அந்த நாட்டை ஆண்ட பாண்டிய மன்னனின் மனைவி மங்கையர்க்கரசியார், அரசனுக்கு வெப்பு நோய் (காய்ச்சல்) வந்தள்ளது, எவராலுமே மாற்ற முடியவில்லை என்று திருஞானசம்பந்தரை வந்து அரசனைக் காப்பாற்ற வேண்டித் தூது அனுப்பினார்.

**கண்ணன் :** தூது என்றால் என்ன தாத்தா?

**தாத்தா :** அந்தக் காலத்தில் இந்தக் காலம் போலத் தொலைபேசி இருக்கவில்லை. கடிதப் போக்குவரத்து இருக்கவில்லை. எனவே முக்கியமான விடயங்களை ஒரு ஓலையில் எழுதி ஆட்களிடம் கொடுத்து அனுப்புவார்கள். அது தூது என்று சொல்லப்பட்டு வந்தது.

**கண்ணன் :** அரசனுக்கு எப்படி வெப்பு நோய் வந்தது? ஆவர்தான் பாதுகாப்பாக இருப்பாரே! அரண்மனையிலே வைத்தியர்கள் இருப்பார்களே? அவர்களால் ஏன் நோயை மாற்ற முடியவில்லை ஆச்சரியமாக உள்ளதே!

**தாத்தா :** அந்தக் காலத்திலே சமண சமயம் என்று ஒன்று தோன்றியது. அச் சமண சமயத்தவர் சைவர்களை எல்லாம் சமண சமயத்துக்கு மாற்றுவதில் மும்முரமாக இருந்தனர். பாண்டிய அரசனையே சமணனாக்கி விட்டார்கள்.

**கண்ணன் :**அப்படியா! தாத்தா. இது இந்தக் காலத்திலும் சில மதத்தினர் வீடு வீடாகத் தட்டிச் சமயத்தைப் பரப்பும் கதை போல இருக்கிறதே.

**தாத்தா :** சரியாகச் சொன்னாயடா கண்ணா! அரசன் சமணனாகி விட்டதால் மக்களும் மாறத் தொடங்கினர். மகாராணி மங்கையர்க்கரசியார் ஒரு சிவபக்தை. அவர் திருவாலவாயில் இருக்கும் இறைவனிடம் அரசனை சைவனாக்கும்படி பிரார்த்தித்து வந்தார். இறைவன் அரசியின் வேண்டுதலைக் கேட்டு அவருக்கு அருள் புரிய விரும்பி அரசனுக்கு வெப்பு நோயை வரச் செய்தார். சமண முனிவர்கள், அரண்மனை மருத்துவர்கள் எத்தனையோ முயற்சிகள் செய்தும் பலன் அளிக்கவில்லை. அந்த நேரம்தான் திருஞானசம்பந்தரை அரசி அரண்மனைக்கு வரவழைத்தார்.

**கண்ணன் :** அவர் என்ன மருந்து கொடுத்தார்? எப்படிச் சுகம் வந்தது?

**தாத்தா :** அவசரப்படாதே கண்ணா! மிச்சத்தைக் கேள். சம்பந்தர் தான் கொண்டுவந்த இறைவனின் திருநீற்றை எடுத்து அரசனின் நெற்றியிலும் உடம்பிலும் பூசி மந்திரமாவது நீறு எனத் தொடங்கும் தேவாரத்தைப் பாடி இறைவனை வணங்கி அரசனின் நோய் நீங்க வேண்டும் என்று பிரார்த்தித்தார். "மந்திரமாவது நீறு" என்று தொடங்கும் பதினொரு பாடல்களையும் தொடர்ந்து பாடினார். உடனே அரசனின் நோய் மாறியது.

**கண்ணன் :** அப்படியா தாத்தா. திருநீறு பூசியதும் நோய் போய்விட்டதா?

**தாத்தா :** ஆமாம் நோய் முற்றாக மாறிவிட்டது. அரசன் ஞானசம்பந்தரை வணங்கி அவருக்குச் சகல மரியாதைகளையும் செய்தான். மீண்டும் சைவனாக மாறினான். அரசியார் ஆண்டவனின் அருளையும் ஞானசம்பந்தரின் அருட் சக்தியையும் கண்டு மனமுருகி வணங்கினார்.

**கண்ணன் :** அப்படியா தாத்தா! நம்பவே முடியவில்லை! இந்தக் காலத்திலும் இப்படி ஏதாவது நடந்ததுண்டா?

**தாத்தா :** அந்தக் காலத்தில் வாழ்ந்த மக்கள் மிகவும் பத்தியுடையவர்களாகவும் நல்ல நெறியில் வாழ வேண்டும் என்ற எண்ணமுடையவர்களாகவும் வாழ்ந்தார்கள். இந்தக் காலத்து மக்களின் வாழ்க்கை முறை முற்றாக மாறுபட்டதாக இருக்கிறது. இருந்தாலும் நம்பிக்கையுடன் கடவுளை வணங்குவோர் பல அற்புதங்களைச் செய்வதாகக் கூறுகிறார்கள். சரியடா கண்ணா! நேரம் 12 மணி ஆகிறது. தீபம் தமிழ் தொலைக்காட்சியைப் போடு. நான் இலங்கைச் செய்திகள் கேட்கப் போகிறேன்.

**கண்ணன் :** சரி தாத்தா! ஞானசம்பந்தரின் அற்புதம் எனது மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. இன்னும் இப்படி நாயன்மார்களின் அற்புதங்களைச் சொல்லுங்கோ. நானும் எனது கம்பியூட்டரில் கொஞ்ச நேரம் விளையாடி விட்டு வருகிறேன்.

(உரையாடல் தொடரும்)

# *Stories of Hindu Saints (continued from last issue)*

# AANDAAL

The remarkable girl who would marry none but the Lord

Aandaal is one of the most extraordinary personalities in religious history. She is known in her native tongue of Tamil as an Aalvaar, one who is "immersed" in the depths of enjoyment of God.

Tradition reckons 12 Alvars, of which Andal is the only female. Between the fifth and ninth centuries, in the Tamil-speaking region of South India, these saints revitalized the Indian religious milieu, sparking a renewal of devotional worship throughout the subcontinent. Traveling from place to place, from temple to temple, from holy site to holy site, they composed exceedingly beautiful poetry to their Divine Beloved, Vishnu, as an expression of their love for Him.



Anyone can see why their poetry was so attractive; at once both impassioned and philosophical, their words cut across all barriers of caste and class, attracting all to their faith. In doing so, they sculpted a new religious heritage of intensely emotional bhakti, or love of the Divine, whose impact is still felt today in the Indian religious life.

Aandaal, whose life and poetry are celebrated every December-January, is the most visible contributor to this heritage.

## Life of Andal

The life of Andal is remarkable in its romantic simplicity. A devout brahmin named Vishnucitta lived in Villiputtur, a town near Madurai. His daily duties included procuring flowers for the worship of the Lord at the local temple.

One morning, as he went about his business, he discovered a baby girl lying under a tulasi plant in his flower garden. Having no family of his own, Vishnucitta felt it was God's grace that gave him this child and named her Gothai, meaning, "gift of Mother Earth." Filled with joy, he took her home and raised her as his own.



Godhai grew up in an atmosphere of love and devotion. Vishnucitta doted on her in every respect, singing songs to her about his beloved Krishna, teaching her all the stories and philosophy he knew, and sharing with her his love of Tamil poetry.

The love Vishnucitta had for his Beloved Lord intensified further in his daughter and before long she was passionately in love with Lord Krishna. Even as a child, Godhai made up her mind to marry none but the Lord of Brindavana, and refused to think of any human being in similar terms.

She imagined what it would be like to be His bride, playing the role of His beloved, enjoying His presence. Unknown to her father, she adorned herself daily with the flower garland he prepared for the Lord at the temple. After admiring her reflection and thinking of herself as His ideal bride, she would put the garland back for her father to take to the temple and offer to the Lord.

One day, Vishnucitta noticed a strand of Godai's hair on one of the garlands. Shocked and saddened by this desecration of what was meant only for the Lord, he scolded Godhai for her misuse of the garland and discarded it. He carefully prepared a new one and offered it to the Lord, begging His pardon all the while.

That night, the Lord appeared to Vishnucitta in his dream and asked him why he discarded Godhai's garland instead of offering it to Him. He told Vishnucitta that He missed the scent of Godhai's body in the flowers, and that He preferred them that way. Would he please continue to give the garlands once worn by Godhai? Overcome with emotion, Vishnucitta awoke and cried tears of both joy and remorse.



It dawned on him that his daughter was someone whose love of God was so intense and pure that even he had not comprehended its extent. Her spiritual greatness was such that the Lord Himself wished to share her presence. From this day on, she became known as "Aandaal", the girl who "ruled" over the Lord.

Aandaal blossomed into a beautiful young woman as she came of marriageable age. When asked to marry, however, she stubbornly refused, saying that she would only agree to marry Sri Ranganatha, the Lord at the great temple town of Srirangam. Vishnucitta despaired, wondering what was to become of his daughter.

One night, Lord Ranganatha appeared in his dream and asked that Aandaal be sent to him in all her wedding finery. Simultaneously, the Lord appeared before the priests at Srirangam and asked them to prepare for the coming of Aandaal. Vishnucitta once again was filled with both joy and sadness; joy that his beloved daughter would attain her goal, but sadness at losing her at the same time.

He made all the wedding preparations and arranged for Aandaal's journey in a palanquin to Srirangam. Aandaal waited with excited anticipation as the wedding party approached Lord Ranganatha's shrine. As they entered the temple, she jumped out of the palanquin, unable to restrain herself any longer. Running into the temple sanctum, she embraced Lord Ranganatha and disappeared in a blaze of glory, having joined her Lord. She was only fifteen at the time.

Aandaal is now one of the best-loved poet-saints of the Tamils. Pious tradition reckons her to be the veritable descent of Bhumi Devi (Mother Earth) in bodily form to show humanity the way to His lotus feet. She is present in all Sri Vaishnava temples, in India and elsewhere, next to her Lord, as she always desired.

## Historicity

The hagiography of Aandaal as presented above is undoubtedly historically true in most important respects. Today, the tulasi garden in which she was found is preserved in Srivilliputtur. Vishnucitta's house, adjacent to Lord Vishnu's temple, has been converted into a temple in honor of Aandaal and contains the well in which she admired her reflection while wearing the Lord's garlands.

Most of all, however, Andal is remembered for her poetry, in which she often strikes autobiographical notes about her love for her Lord. She describes herself as a young girl, still not fully mature, pining away for him. She beseeches her friends, the god of love, and even animals for help in her quest to attain him. Finally, she describes her good fortune of being the daughter of Vishnucitta, the best of the devout, who lives in Srivilliputtur and adores the Lord.

## Andal's Poetry

Andal composed two works in her short life. Both are in Tamil and are unique in their literary, philosophical, religious, and artistic content. Her contribution is even more remarkable considering that she was a teenage girl when she composed these poems, at a time when there is no other record of Tamil women composing poetry. Far from being the prattlings of a youngster, Andal's verses display a literary and religious maturity far beyond her years.

Her first work is the Tiruppavai; a poem of thirty verses in which Andal imagines her to be a cowherd girl during the incarnation of Lord Krishna. She yearns to serve Him and achieve

happiness not just in this birth, but also for all eternity, and describes the religious vow (paavai nonbu) that she and her fellow cowgirls will take for this purpose.


The second is the Nacciyar Tirumoli, a poem of 143 verses. Tirumoli, literally meaning "sacred sayings", is a Tamil poetic style in which the work is composed. "Nacciyar" means goddess, so the title means "sacred sayings of our Goddess." This poem fully reveals Andal's intense longing for Vishnu, the Divine Beloved. Utilizing classical Tamil poetic conventions and intermixing stories from the Sanskrit Vedas and Puranas, Andal creates imagery that is quite possibly unparalleled in the whole gamut of Indian religious literature.

The impact of these works on the daily religious life of the South Indian has been tremendous. Just like the Ramayana, people are never tired of listening to the Tiruppavai. Women, men, and children of all ages, particularly in Tamil Nadu, recite the poem itself with great religious fervor. The daily services in most Vaishnava temples and households include its recitation.

Innumerable scholars in a number of languages have commented both of these works, particularly the Tiruppavai, extensively over the centuries. Today, we are fortunate to have many translations of the Tiruppavai in Western languages, which make these poems available to an even wider audience.


During the month of Margali (December-January), discourses on the Tiruppavai in Tamil, Telugu, Kannada, Hindi and English take place all over India.

*(To be continued)*




Picture of Sri Villiputhoor Temple


THIRUVALLUVAR
First century B.C. Month of Vaikasi
(the second month in Tamil calendar).
A baby boy was born to Vellala Chieftain,
Mayilakizhar in Mylapore in Tamilnadu.
Thamizavel, occupying the post of Valluvar (chamberlain)
in the court of King Pandyan at Madurai and the relatives
named the baby Valluvan. The birth of the baby brought
immense joy to his parents.
The youth grew as student, farmer and soldier.
While returning from a battlefield, Valluvan met Vasuki,
the daughter of the Vellala Chieftain Vazhithunaivar of
Kavithipakkam who owned thousand ploughs.
Valluvan and Vasuki fell in love and their
marriage was solemnized.
As soon as she awoke at dawn, Vasuki worshipped
her husband without worshipping other Gods.
A beautiful daughter was born. They
named her Mullai and brought her up
with loving care.
"Oh, dear, what is the purpose
of domestic life?
To give to the poor
and live in fame. It is
my principle.
Dear, say it is
our principle



Master, I am a poet suffering from poverty with my ailing wife and hunger stricken ten children.
Even my mother seems unkind to me because I am so poor.
Master, may I ask you a question relating to life. Don't you think the best way to live is being an ascetic?
My preference is domestic life
Why don't you folks stay with us for a while and judge for yourself!
Nagavel, son of his late relative Etti and merchant of Madurai came to him with nine gems. He did not pay proper wage to the palanquin bearer.
Nagavel, you should be fair to everyone! Pay the man his wages!
You're right, uncle! I will pay him what I owe.
Vasuki, poverty is the root cause for many miseries found in this world.
Some years passed since the demise of their parents. Though he became poor, he gave presents to Panan and Padini, the minstrel couple from Pandianadu.
An old man came to Valluvar.
My daughter is very pretty. But I have no money to get her married. She is not getting any younger. I hope you can help me now.
Valluvar had no resources; he thought of the jewelry belonging to his wife and daughter. The women, knowing his mind handed the jewelry over to the poor man.


Auntie, do you not think that uncle is overdoing this charity thing? To give away your jewelry...?!
Nagavel, his principle is my principle. It is my duty to adhere to it.
I will be your slave from this moment on. In return, give this girl two gold coins.
Excuse me. Love of gold shut my eyes. Oh girl, take
Nagavel's mind aspired for Mullai. Valluvar sent him back refusing the present. When he was about to vacate his mansion to the richman who purchased it, a poor girl requested him to spare two gold coins to give medical treatment to her mother in death bed,
Oh, richman, lend me two gold coins
On what surety?
Leaving the mansion, Valluvar lived in a mud house resorting to weaving for his livelihood
At the close of third Century B.C. Elala Chozhan of Tamilnadu won and ruled over Sri Lanka.
Anuradhapuram.
Elalasingan was a descendant of Elela Chozhan and a shipmerchant of Mylapore. Valluvar wanted to see him regarding employment.
Is Elesingan available?
He is praying in the next room.
Is he praying or in the port?
My mind was not on prayers; I was worried about my stranded ship in the port. You seem to have the power to learn what is on people's mind. I request you to be my teacher.
You are my first disciple.

உ
ஓம் சக்தி

வட இலண்டன்


# திருவருள்மிகு என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

61-65 Church Lane, Edmonton, London N9 9PZ. Tel:02088843333. Website:www.ambaal.org

## 4ம் வருட மகோற்சவ திருவிழா விஞ்ஞாபனம்



"நாகம்மை திருநாமம் நூறுநூறாயிரம் நண்ணினால் போகங்கள் சேருமே
சுக நலன்கள் பெருகுமே"



(22.06.08 ஞாயிற்றுக்கிழமை முதல் 9.07.08 புதன்கிழமை வரை)

**THIRUVARULMIGU ENFIELD NAGAPOOSHANI AMBAAL TEMPLE**

# 4th ANNUAL FESTIVAL

## (From 22ND June 08 Sunday till 9th July 08 Wednesday)

| | |
|---|---|
| 22nd June 08 (Sunday) | Ganapathi Utsavam 9.00 a.m. & 6.00 p.m. |
| 23rd June 08 (Monday) | Flag Hoisting Festival (Kodiyettam) 12.00 Noon |
| 06th July 08 (Sunday) | Chariot Procession from 10.00 a.m till 1.00 p.m. |
| 07th July 08 (Monday) | Theertham (Sacred water cutting Festival) 11.30 a.m. and Panjamoorthi Procession |
| 08th July 08 (Tuesday) | 1009 Conch Abishegam & evening Poonggavanam |
| 09th July 08 (Wednesday) | Vairavarmadai |

## Chariot Festival on 6th July 2008 (Sunday)
## 10.00 am to 1.00 pm

விழாக்காலங்களில் அபிசேகத்திற்குத் தேவையான பால், தயிர், நெய், பூவகைகள், பழவகைகள், சமித்து, அன்னதானப் பொருட்கள் முதலியவற்றை வழங்கி அன்னையின் அருள் பெறுக.

HINDU TAMIL CULTURAL ASSOCIATION (ENFIELD) & UBAYAKARAR




இலண்டனில் வாசன் அச்சகத்தினரால் (தொலைபேசி : 020 8646 2885) வடிவமைத்து, அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 22-06-2007 அன்று வெளியிடப்படுகிறது.